بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

இதழ் 37

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

02 முஹர்ரம் 1440 ஹிஜ்ரி கமரி 13 தபூக் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
13 செப்டம்பர் 2018

## அல்லாஹ்வின் கட்டளை

يَاأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا أَنْفِقُوْا
مِنْ طَيِّبٰتِ مَا كَسَبْتُمْ
وَمِمَّآ أَخْرَجْنَا لَكُمْ مِّنَ الْأَرْضِ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் சம்பாதித்ததிலிருந்தும் நாம் உங்களுக்காக பூமியிலிருந்து வெளியாக்கியவற்றிலிருந்தும் தூய்மையானவற்றைச் செலவு செய்யுங்கள். (2:26)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**பரிசுத்த ஆவியின் மூலமாக வானத்தின் அருட்கொடையிலிருந்து நல்லொழுக்கத்தில் பங்கு பெறாத ஒவ்வொருவரும் தன் நல்லொழுக்கத்தைப் பற்றிய வாதத்தில் பொய்யனாகவே இருக்கிறார். ஏனெனில் அவரது நல்லொழுக்கம் என்னும் தண்ணீரின் அடியில் அதிகமான சேறும், சாணமும் உள்ளன. அவை ஆன்மாவின் ஆவேசத்தின் போதே வெளியாகின்றன**

**நீங்கள் இறைவனோடு உண்மையான தொடர்பை உருவாக்குங்கள். ஏளனமான நகைத்தல், பொறாமை, பழித்தல், பேராசை, பொய், விபச்சாரம், தீய பார்வை, தீய எண்ணம், உலக இச்சை, பெருமை, கர்வம், சுயநலம், விஷமத்தனம், குதர்க்க வாதம் ஆகியவற்றை முற்றிலும் விட்டு விடுங்கள்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

மற்ற உலகங்கள் மீது இறைவனுக்கு அதிகாரம் இருப்பதைப் போன்று பூமியிலும் எல்லா நேரத்திலும் அவனுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை சூரா ஃபாத்திஹாவின் துஆ நமக்குக் கற்றுத் தருகிறது. சூரா ஃபாத்திஹாவின் ஆரம்பத்தில் இறைவனின் எல்லா ஆற்றல்மிக்க பண்புகளைப் பற்றிய குறிப்பு உள்ளது. உலகில் வேறு எந்த வேதமும் அவ்வாறு தெளிவாக எடுத்துக் கூறவில்லை.

தான் ரஹ்மான், ரஹீம், மாலிகி யவ்மித்தீன் ஆக இருப்பதாக இறைவன் கூறிக் கொள்வதுடன் பின்னர் தன்னிடம் துஆ கேட்கும்படி போதித்திருக்கின்றான். மேலும் கேட்கப்பட்ட அந்த துஆவில் (இயேசு) மஸீஹால் போதிக்கப்பட்ட துஆவைப் போல் ஒவ்வொரு நாள் அப்பத்திற்காக மட்டும் வேண்டப்படவில்லை.

மாறாக, தொன்று தொட்டே மனித இயல்பில் என்னவெல்லாம் தகுதிகள் வழங்கப்பட்டுள்ளனவோ மேலும் அவனுக்காக என்னவெல்லாம் விருப்பமாக்கப்பட்டுள்ளனவோ அவற்றிற்காகவே துஆ கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த துஆ இதுவாகும்:

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

பொருள்: முழுமையான பண்புகளுக்கெல்லாம் உரிமையாளனே! அருளுக்குரியவனே! ஒவ்வோர் அணுவும் உன்னாலேயே வளர்ந்து வருகின்றது. மேலும் உனது பண்புகளாகிய ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத், நன்மை தீமைகளுக்குப் பிரதிபலன் அளிக்கும் வல்லமை ஆகியவற்றால் அவை பலன் அடைந்து வருகின்றன. நீ எங்களைச் சென்ற கால நேர்வழி பெற்றவர்களின் வாரிசுகளாக ஆக்குவாயாக.

அவர்களுக்கு அருளப்பட்ட ஒவ்வோர் அருட்கொடையையும் எங்களுக்கு நீ தந்தருள்வாயாக. மேலும் நாங்கள் உனக்குக் கீழ்ப்படியாதவர்களாகி உனது கோபத்திற்கு ஆளாகாமலிருக்க நீ எங்களைக் காப்பாற்றுவாயாக. மேலும் நாங்கள் உனது உதவி பெறுவதிலிருந்து பாக்கியமற்றவர்களாகி வழிகெட்டுப் போவதிலிருந்தும் நீ எங்களைத் தடுத்துப் பாதுகாப்பாயாக. ஆமீன்.

இப்போது இந்த எல்லா விதமான ஆராய்ச்சிகளிலிருந்தும் பைபிளின் புதிய ஏற்பாட்டின் துஆவிற்கும் திருக்குர்ஆனின் துஆவிற்குமுள்ள வேறுபாடு வெளிப்பட்டு விட்டது. புதிய ஏற்பாடானது இறைவனது ஆட்சி வருவதற்குரிய ஒரு வாக்குறுதியை அளிக்கிறது. ஆனால் திருக்குர்ஆனோ இறைவனது ஆட்சி உங்களிடையே இருந்து வருவதாகக் கூறுகிறது. இருந்து வருவது மட்டுமல்லாமல் செயல் முறையில் உங்கள் மீது அருட்கொடையும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அது கூறுகிறது.

சுருக்கமாக, புதிய ஏற்பாட்டில் ஒரு வாக்குறுதி மட்டுமே இருக்கிறது. இதற்கு மாறாகத் திருக்குர்ஆன் வாக்குறுதி மட்டுமல்லாமல் நிலைநாட்டப்பட்ட ஆட்சியையும் அதன் அருட்கொடைகளையும் காட்டிக் கொண்டிருக்கிறது. மேலும் திருக்குர்ஆன் உண்மையாளருக்கு இவ்வுலக வாழ்விலேயே இரட்சிப்பையும், சுகத்தையும் வழங்கக்கூடிய இறைவனையே அறிமுகப்படுத்துகிறது.

இதிலிருந்தும் திருக்குர்ஆனின் மகத்துவம் நன்கு புலனாகிறது. மேலும் எந்த ஓர் ஆன்மாவும் அவனுடைய அருட்கொடை பெறாமல் இல்லை. மேலும் ஒவ்வோர் ஆன்மா மீதும் அதற்குத் தகுந்தாற்போல் அவனது ருபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத் ஆகியவற்றின் அருட்கொடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்கு மாறாக புதிய ஏற்பாடானது இதுவரை ஆட்சி வராமல் வெறும் வாக்குறுதி மட்டும் அளிக்கப்பட்ட இறைவனையே அறிமுகப்படுத்துகிறது.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**கடந்த ஞாயிற்றுக்கிழமை யூ.கே –வின்ஆண்டு மாநாடு தனது அருள்களைப் பொழிந்தவாறும் அல்லாஹ்வின் அருள்களை வெளிப்படுத்தியவாறும் நிறைவடைந்தது. இந்த மூன்று நாட்கள் மிகவும் அருளுக்குரியனவாக இருந்தன – அல்ஹம்துலில்லாஹ்!**

**இந்தக் காட்டுப் பகுதியில் அனைத்து வசதிகளுடன் தற்காலிகமாக ஒரு நகரத்தை உருவாக்குவது என்பது சாதாரண விஷயமல்ல. அதிலும் 100 சதவிகிதம் தொழில் சார்ந்த வல்லுநர்களும் இந்தப் பணியைச் செய்வதில்லை. நடைபெறக்கூடிய அனைத்துப் பணிகளும் கிடைத்து வரும் விளைவுகளும் அல்லாஹ்வின் அருளால்தான் நடக்கிறது. அல்லாஹ்தான் இந்த முயற்சிகளுக்கு அசாதாரணமாக வெற்றியை வழங்குகிறான். வரக்கூடிய விருந்தினர்களும் பணியாளர்களின் உணர்வுகளைப் பார்த்து வியந்து இதை வெளிப்படுத்துகின்றனர்**

**மாநாடு நம்மவர்களின் ஈமானை வலுவூட்டுவதற்கும், சகோதரத்துவத்தை அதிகப்படுத்துவதற்கான காரணியாக இருக்கின்ற அதே வேளையில் அந்நியர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைப்பதற்கும் காரணியாக அமைகிறது**

**இப்போது நான், சுருக்கமாக சில தாக்கங்களை உங்கள் முன் எடுத்து வைக்கிறேன். அதிலிருந்து மாநாட்டின் அருள்களினால் மற்றவர்களின் மீதும் எவ்வாறு தாக்கம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்**

**ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகள், ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவுகள் மற்றும் இதர சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவுகள், ஆண்டு மாநாட்டின் சுற்றுச் சூழல் மற்றும் தொண்டு செய்யும் பணியாளர்கள் அர்ப்பணிப்பு, ஆண்டு மாநாட்டின் அருள்கள் தொடர்பாக பல்வேறு நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த விருந்தினர்களின் தாக்கங்கள் தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சில சம்பவங்கள் பற்றிய குறிப்புகள்**

**Radio, TV Channels, Social Media ஆகியவற்றின் மூலம் ஆண்டு மாநாடு தொடர்பான செய்தி பரந்த அளவில் சென்றுள்ளது. கோடிக்கணக்கான மக்கள் வரை இதன் மூலமாக இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 10 ஆகஸ்ட் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **10 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த ஞாயிற்றுக்கிழமை யூ.கே –வின்ஆண்டு மாநாடு தனது அருள்களைப் பொழிந்தவாறும் அல்லாஹ்வின் அருள்களை வெளிப்படுத்தியவாறும் நிறைவடைந்தது. இந்த மூன்று நாட்கள் மிகவும் அருளுக்குரியனவாக இருந்தன. ஆண்டு மாநாட்டிற்கான ஏற்பாடுகள் ஏறக்குறைய வருடம் முழுவதும் நடைபெறுகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

ஆனால் இறுதி மூன்று மாதங்களில் குறிப்பாக ஏற்பாட்டாளர்களும் ஏராளமான தன்னார்வத் தொண்டர்களும் மாநாட்டின் ஏற்பாட்டில் மும்முரம் ஆகி விடுகின்றனர். மாநாட்டிற்கு முந்தைய இரண்டு வாரங்கள் தன்னார்வத் தொண்டர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து விடுகின்றது. குறிப்பாக ஹதீகத்துல் மஹ்தியில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்குப் பணியார்கள் தமது அனைத்து திறமைகளையும் பயன்படுத்திப் பணியாற்றுகிறார்கள். அவர்களில் இளைஞர்களின் எண்ணிக்கை கணிசமானதாகும். இந்தக் காட்டுப் பகுதியில் அனைத்து வசதிகளுடன் தற்காலிகமாக ஒரு நகரத்தை உருவாக்குவது என்பது சாதாரண விஷயமல்ல. அதிலும் 100 சதவிகிதம் தொழில் சார்ந்த வல்லுநர்களும் இந்தப் பணியைச் செய்வதில்லை. நடைபெறக்கூடிய அனைத்துப் பணிகளும் கிடைத்து வரும் விளைவுகளும் அல்லாஹ்வின் அருளால்தான் நடக்கிறது.

அல்லாஹ்தான் இந்த முயற்சிகளுக்கு அசாதாரணமாக வெற்றியை வழங்குகிறான். வரக்கூடிய விருந்தினர்களும் பணியாளர்களின் உணர்வுகளைப் பார்த்து வியந்து இதை வெளிப்படுத்துகின்றனர். பணியாளர்கள் மாநாட்டிற்கு முன்னதாக செய்து வந்த பணி மாநாட்டின் நாட்களில் இன்னும் அதிகமாகி விடுகிறது.

பிறகு இளைஞர்கள், முதியவர்கள், ஆண், பெண், சிறுவர்கள் அனைவரும் அதில் கலந்து கொள்கின்றனர். அந்நிய விருந்தினர்களுக்கு இது ஓர் அசாதாரணமான ஒன்றாகும். எவ்வாறு பெரியவர்களும் சிறியவர்களும் தமது பணிகளில் மூழ்கி இருக்கின்றனர் என்பதைப் பார்த்து வியக்கின்றனர். இதுபோன்ற பணிகளில் அனுபவம் பெற்றவர்கள் இவர்களின் பணியைக் கண்டு மிகவும் தாக்கத்திற்குள்ளாகின்றனர்.

அவர்கள் வெளிப்படுத்தும் தாக்கங்கள் அசாதாரணமான வெளிப்பாடுகளாக இருக்கின்றன. பணியாளர்களைத் தவிர மாநாடும் அவர்களின் மீது ஒரு குறிப்பான தாக்கத்தை அவர்கள் மீது ஏற்படுத்தி இருப்பதாகக் கூறுகின்றனர். அவர்களின் வாழ்க்கைகளை மாற்றி இருக்கின்றது. முஸ்லிம்களாக

இல்லாதிருந்தும் கூட அவர்களின் மீது இஸ்லாத்தின் ஒரு தாக்கம் ஏற்பட்டுள்ளது. இஸ்லாம் மற்றும் ஜமாஅத் பற்றிய அவர்களின் அறிவு அதிகரித்துள்ளது. இஸ்லாத்தைப் பற்றிய எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவதற்குப் பதிலாக அதன் சிறப்பம்சம் பற்றி அவர்களுக்குத் தெரிய வந்தது.

ஆக, மாநாடு நம்மவர்களின் ஈமானை வலுவூட்டுவதற்கும், சகோதரத்துவத்தை அதிகப்படுத்துவதற்கான காரணியாக இருக்கின்ற அதே வேளையில் அந்நியர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைப்பதற்கும் காரணியாக அமைகிறது. மாநாட்டின் இரண்டாம் நாள் சொற்பொழிவில் கடந்த ஆண்டில் பொழிந்த அல்லாஹ்வின் அருள் மழை பற்றிய சுருக்கம் எடுத்துரைக்கப்படுகிறது.

மேலும் அல்லாஹ்வின் அளவற்ற அருளுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்தலின் காரணமாக மேலும் அதிகமாக நன்றி தெரிவிக்கும் வகையில் மாநாட்டின் நாட்களிலேயே அல்லாஹ்வின் அருள் மழை அதிகமாகப் பொழிந்தது. அந்நிய விருந்தினர்களின் மாநாடு பற்றிய தாக்கங்களும் அதன் ஒரு வெளிப்பாடாகும்.

இப்போது நான், சுருக்கமாக சில தாக்கங்களை உங்கள் முன் எடுத்து வைக்கிறேன். அதிலிருந்து மாநாட்டின் அருள்களினால் மற்றவர்களின் மீதும் எவ்வாறு தாக்கம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

பெனினின் ஒரு விருந்தினர் **வேலன்டைன் ஹுதே** (Valantine houde) சாஹிப் எட்டு வருடங்கள் அமைச்சராக இருந்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார். இவர் மாநாட்டில் கலந்து கொண்டார். இவர் கூறுகிறார்: ஒரு பெரும் தொகையைச் செலவிட்டும் கூட பெற முடியாதவற்றை மாநாட்டின் மூலம் பெற்றுள்ளேன். ஓர் அமைதியான ஆன்மீகச் சூழலாக அது இருந்தது. அதில் இருக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் இன்று வரை இதுபோன்ற ஒழுங்கமைக்கப்பட்ட இஜ்திமாவைக் கண்டதில்லை. இதில் ஏறக்குறைய 40 ஆயிரம் மக்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு இன நிற மக்கள் இருந்தும் கூட எவ்வளவு அமைதியான சூழல் நிலவியது. எவ்வித சண்டை சச்சரவும் இல்லை. ஒவ்வொருவரும் பிறருக்குத் தொண்டாற்றுவதில் ஈடுபட்டுள்ளனர். சிறியவர், பெரியவர், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் ஆகிய அனைவரும் உயர் நல்லொழுக்கத்துடன் பிறருடைய வசதிக்காகப் பணியாற்றுகின்றனர். இது என்னைப் பொருத்தவரையில் மிகவும் வியப்பிற்குரிய விஷயமாகும்.

இவ்வளவு பெரிய கூட்டத்தில் எந்த போலீஸும் இல்லை. இராணுவமும் இல்லை. எல்லாப் பக்கமும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தன்னார்வத் தொண்டர்களே பணியாற்றுவதைக் காண முடிந்தது. இன்றைய காலக்கட்டத்தில் தன்னலமின்றியும், சுயநோக்கமில்லாமலும் பணியாற்றுவது என்பது எப்படி சாத்தியமாகும்? என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் இவை அனைத்தும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத்தின் தலைமையில் சாத்தியமாகும் என்ற முடிவுக்கு வந்தேன். இந்த ஜமாஅத்தின் கிலாஃபத் சிறுவர்களுக்கும், முதியவர்களுக்கும், இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் இந்த அளவிற்குத் தர்பிய்யத் வழங்கியுள்ளது. மேலும் சிறு வயதிலிருந்தே மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

அவர்கள் கூறுகிறார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத் உலகிற்கு எடுத்துக் காட்டும் இஸ்லாம் எவ்வாறு தனது உறுப்பினர்களுக்கு தர்பிய்யத் வழங்குகிறதென்றால், இதனால் மிக விரைவில் உலகம் அஹ்மதிய்யத்தில் இணைந்து விடும் என்று என்னால் கூற முடியும். அஹ்மதிய்யத்தே உலகில் மிகப் பெரிய மார்க்கமாக இருக்கும்.

அஹ்மதிய்யத் மார்க்கம் அல்ல. மாறாக இஸ்லாம்தான் எல்லாவற்றிற்கும் பெரிய மார்க்கமாக இருக்கும். இது அஹ்மதிய்யத்தின் மூலமாகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவும் மீண்டும் நிறுவப்படும்.

அவர்கள் கூறுகிறார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத் உலகின் முன் எடுத்து வைக்கும் போதனைகளின் செயல் வடிவம் இங்கு மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலம் காணக் கிடைத்தது. நான் இந்த மாநாட்டின் ஏராளமான அழகிய நினைவுகளை எடுத்துக் கொண்டு இலண்டனிலிருந்து எனது நாட்டிற்குத் திரும்புகிறேன். என்னைப் பொருத்தவரை இந்தப் பொழுதுகள் வார்த்தைகளால் கூற முடியாத அழகிய நினைவுகளாகும்.

பிறகு பெனின் நாட்டின் ஒரு விருந்தினர் ***சீவானோ பாஸ்கல்*** (Tchinwanu pascal) சாஹிப். இவர் பெனினின் Planning and Development அமைச்சகத்தில் உயர் பதவியில் இருக்கின்றார்.

இவர் கூறுகின்றார்: நான் ஏராளமான மாநாடுகளைப் பார்த்துள்ளேன். அதில் கலந்து கொண்டுள்ளேன். உங்களுடைய மாநாட்டைப் போல் வெற்றிகரமான ஒழுங்கமைக்கப்பட்ட மாநாட்டினை நான் இதற்கு முன்னர் கண்டதேயில்லை. இந்த மாநாட்டில் பணியாற்றக்கூடிய அனைத்துப் பணியாளர்களும் தமது பொறுப்புகளை நன்கு உணர்ந்திருந்தனர்.

மேலும் அந்தக் கடமைகளை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றி வந்தனர். 40 ஆயிரம் எண்ணிக்கையில் மக்களுக்கு உணவு வழங்குவது வியப்பிற்குரியதாகும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக நம்ப முடியாத விஷயம் என்னவென்றால், உணவு சமைப்பவர்கள், வழங்குபவர்கள் அனைவரும் தன்னார்வத் தொண்டர்கள் என்பதாகும்.

முழு உலகிலும் இந்த உணர்வுடன் பணி செய்தால் உலகில் போர்கள் முடிவுக்கு வந்து விடும் என்றும் மனித குலத்தின் பிரச்சனைகள் தீர்ந்து விடும் என்றும் என்னால் உறுதியாக கூற முடியும். அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் புகழாமல் என்னால் இருக்க முடியாது. இந்த ஜமாஅத்தின் சிறியவர்களும், இளைஞர்களும், முதியவர்களும், பெண்களும் கட்டுக்கோப்பு மிக்கவர்களும், கண்ணியத்துடன் நடப்பவர்களும் ஆவர்.

ஹேத்தியிலுள்ள அதிபரின் பிரதிநிதி **ஜோசப் பேரே** (Joseph Pierre) சாஹிப் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: இந்த மாநாடு எனது வாழ்நாளின் மிகச் சிறந்த அனுபவமாகும். இதை ஒருபோதும் என்னால் மறக்க இயலாது. பணியாளர்களின் தன்னிகரற்ற நடத்தை எனது கண்களைத் திறந்து விட்டன. மாறாக, இஸ்லாம் தொடர்பான எனது சிந்தனையை முற்றிலுமாக மாற்றி விட்டது.

பிறகு ஐவரிகோஸ்டின் Supreme Court –ன் நீதிபதி ***தோரே அலி*** சாஹிப் வந்திருந்தார். இவர் ஐவரிகோஸ்டின் National Constitutional Council –ன் ஆலோசகர் ஆவார். இவர் கூறுகின்றார்: நானும் முஸ்லிம் ஆவேன். கடந்த 20 ஆண்டுகளாக முஸ்லிம்களின் பல்வேறு மார்க்கப் பிரிவுகளின் மாநாடுகளில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்து வருகிறது. ஆனால் இந்த மூன்று நாட்களில் எனக்கு கிடைத்த இஸ்லாத்தைப் பற்றிய அறிவு இந்த 20 ஆண்டுகளில் கிடைக்கவில்லை.

இந்த மூன்று நாட்களில் எனக்கு கிடைத்துள்ள ஆன்மீக முன்னேற்றம் கடந்த 20 ஆண்டுகளில் கிடைக்கவில்லை.

அவர் கூறுகிறார்: அஹ்மதி அல்லாத ஆலிம்களிடம் ஒன்றுமில்லை. இஸ்லாத்தைப் பற்றி எவரேனும் உண்மையான போதனைப் பெற வேண்டுமென்றால் அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் வரட்டும்.

அவர் கூறுகிறார்: மாநாட்டில் தன்னார்வத் தொண்டர்கள் டியூட்டி கொடுப்பதைப் பார்க்கும்போதே அஹ்மதிகளுக்கு கிலாஃபத்துடன் அதிக அன்பு உள்ளது என்பது தெரிந்து விடுகிறது. அந்த அன்பின் காரணமாகவே அவர்கள் தங்களுடைய கலீஃபாவிற்கு முழுமையாகக் கட்டுப்படுகிறார்கள். அவர்கள் தங்களுக்குள் மிகவும் நேசத்துடன் இருக்கின்றனர். இந்த நேசத்தில் ஓர் ஒற்றுமை உள்ளது. இதன் காரணமாகவே அவர்கள் இஸ்லாத்திற்குச் சரியான விதத்தில்

தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வேறு எந்த இஸ்லாமிய பிரிவுகளிடமும் இதுபோன்ற வழிகாட்டியும், ஒற்றுமையும் இல்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் எதிர்காலத்திலும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொள்வேன். அத்துடன் எனது மனைவியையும் அழைத்து வருவேன்.

பிறகு பெலீஸ் (Belize) தீவிலிருந்து வந்திருந்த ஒரு பெண் நிரூபர் **செர்வாஸ்கீஸ்** (Sahar Vanquez) சாஹிபா கூறுகிறார்: நான் மியாமியிலிருந்து இலண்டனுக்கான விமானத்தில் அமர்ந்தவுடன் எனது உள்ளத்தில் பயமும், அச்சமும் ஏற்பட்டது. நான் ஏழு மணி நேரம் நீண்ட பயணத்தை உடைய விமானத்தில் இருப்பதால் அந்த பயம் இருக்கவில்லை. மாறாக, நான் எனது அடுத்த மூன்று நாட்களை முஸ்லிம்களுடன் செலவிட வேண்டும் என்ற சிந்தனை இருந்தது. முழு உலகிலும் நிகழும் மிக மோசமான தீவிரவாத சம்பவங்களுக்கு சில முஸ்லிம்களே பொறுப்பாளியாவர்.

இனி நான் திரும்பியும் கூட போக முடியாது என்ற உணர்வு ஏற்பட்டது. இப்போது விமானமும் கிளம்பி விட்டது. எப்படியேனும் இதை எதிர்கொண்டேயாக வேண்டும் என்று எண்ணியவாறு நான் ஏதேனும் தீவிரவாத தாக்குதலுக்குப் பலியாகி விடக்கூடாது என்பதற்காக பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். நான் எந்த தாக்குதலுக்கும் பலியாகவில்லை.

மாறாக உண்மை எனது எண்ணத்திற்கு நேர் மாற்றமாக இருந்தது. இங்கு நான் ராணியைப் போல் கவனிக்கப்பட்டேன். மாநாட்டின் தாக்கங்கள் எனது வாழ்வின் மிகச் சிறந்த தாக்கங்களில் ஒன்றாகும். நான் அதிகமான பேர்களை சந்தித்துள்ளேன். ஆனால் அஹ்மதிகளைப் போன்று அனுதாபம் கொண்டவர்களைச் சந்தித்ததில்லை. நான் உயர்வான மற்றும் சிறந்த ஜமாஅத்தை அடைந்தேன். பணி மற்றும் அன்பின் உயர் தரங்களைக் காண்பதற்கான நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஒவ்வொரு நாளும் மிகவும் வசீகரிக்கக்கூடியதாக இருந்தது.

இங்கிருந்து அதிகமான நண்பர்களையும் நினைவுகளையும் என்னோடு எடுத்துச் செல்கிறேன் என்பதில் நான் பெருமை கொள்கிறேன். இது உண்மையில் எப்படிப்பட்ட ஓர் அனுபவமாக இருந்ததென்றால் இதை ஒருபோதும் என்னால் மறக்க இயலாது.

பிறகு **பெலிஸ்** (Belize) நகரின் மேயர் பெர்னார்டு ஜோஸப் (Bernad Joseph) கூறுகிறார்: மாநாட்டின் முதல் அனுபவம் மிகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் உள்ளங் கவரக்கூடியதாகவும் இருந்தது. நான் மூன்று நாட்களும் அஹ்மதிகளின் சகோதரத்துவம், அன்பு மற்றும் மனித குலத் தொண்டால் மிகவும் தாக்கத்திற்குள்ளாகியுள்ளேன். நான் எப்படிப்பட்ட ஒரு நாட்டிலிருந்து வந்துள்ளேன் என்றால் அங்கு ஏராளமான சமூக பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறோம்.

நான் பெலிஸ் நகரின் மேயர் என்ற அடிப்படையில் இந்த அனைத்து சமூக பிரச்சனைகளிலிருந்தும் விடுபடுவதற்கு அநேகமாக பெலிஸின் உள்ளூர் அஹ்மதிய்யா ஜமாஅத்திடமிருந்து வழிகாட்டல் பெற வேண்டும் எனக் கருதுகிறேன்.

அவர் கூறுகிறார்: நான் இங்கிருந்து மிகச் சிறந்த நினைவுகளையும், இந்த மூன்று நாட்களில் ஏற்பட்டுள்ள தொடர்புகளையும் என்னோடு கொண்டு செல்கிறேன். தங்கும் ஏற்பாடு, உணவு, பயணத்தின் அனைத்து ஏற்பாடுகளும் மிகவும் உயர் தரம் வாய்ந்தவையாக இருந்தன.

கார் ஓட்டுநர்கள், ஏர்போட்டில் நின்று வரவேற்கும் பணியாளர்கள், இதேபோல் மாநாட்டின்போது தண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கும் சிறுவர்கள், பார்கிங் பணியாளர்கள், உணவு சமைக்கக் கூடியவர்கள் மேலும் இதுபோன்று திரைக்குப் பின்னால் தொண்டாற்றும் வாய்ப்பினைப் பெற்ற அனைத்து பணியாளர்களும் இந்த மாநாட்டை மிகவும் நினைவிற்குரியதாக ஆக்கி விட்டனர்.

பிறகு இத்தாலியிலிருந்து ஒரு பேராசிரியர் **ஜுஸ்தோ லாகுன்ஸா பல்தா** (Justo Lacunza Balda) சாஹிப் வந்திருந்தார். இவர் கிறித்தவ பாதிரியார் ஆவார். இவர் முன்னாள் போப்பின் ஆலோசகராகவும் இருந்துள்ளார். இவர் கூறுகிறார்: நான் குறிப்பாக மூன்று விஷயங்களைக் குறித்து வைத்துள்ளேன். முதலாவதாக, பல்வேறு சமுதாயங்கள் இவ்வாறு அன்புடன் சந்தித்துக் கொள்வதும் எவ்வித தயக்கமும் இல்லாதிருப்பது வியப்பிற்குரிய விஷயமாகும்.

உலகின் வேறெங்கும் இதுபோன்ற காட்சி தென்படாது. இரண்டாவது, இந்த மாநாட்டில் எனக்கு அதிகமான நிம்மதி தென்பட்டது. எவ்வித நிம்மதியின்மையும் இருக்கவில்லை. மூன்றாவது விஷயம், காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகள் தன்னகத்தே மிகத் தெளிவான தூதுச் செய்திகளைக் கொண்டுள்ளன. மேலும் அதில் நமக்கு நிறைய செயல் முன்னுதாரணம் உள்ளன.

பிறகு பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒரு விருந்தினர் **அலினா லூபஸ்** சாஹிபா கூறுகிறார்: இப்போது நான் Arab News –ற்காக பணி செய்து வருகிறேன். கடந்த ஆண்டும் மனீலாபுல்லட்டின் என்ற பத்திரிகையின் நிருபர் என்ற அடிப்படையில் கலந்து கொண்டேன். (இவர் இந்த வருடம் மீண்டும் தனது சொந்த செலவில் வந்துள்ளார்.)

இவர் கூறுகிறார்: மாநாட்டில் கலந்து கொள்வது எனது இரண்டாவது அனுபவமாகும். ஒவ்வொரு முறையும் மாநாட்டின் ஏற்பாடுகளும் பிற விஷயங்களும் என்னை மிகவும் திகிலுக்குள்ளாக்கி இருக்கிறது என்பதை நான் கூறியே ஆக வேண்டும். இதே போன்று மக்களின் ஈமானிய நிலையைப் பார்த்து குறிப்பாக எவ்வாறு பல்வேறு நிற இன மக்கள் மாநாட்டின் சூழலில் ஒருவர் மற்றவரோடு இணைந்து விடுகின்றனர் என்பதும், எவ்வாறு பல்வேறு நிற இன மக்களிடத்தில் ஒருவோதும் எவ்வித வேறுபாடும் இருப்பதில்லை என்கிற உங்களுடைய அன்பு மற்றும் சகோதரத்துவம்தான் உங்களுடைய தூதுச் செய்திக்கு செயல் வடிவம் வழங்குகிறது.

இது அனைத்து விதமான சொற்பொழிவுகளை விடவும் நீண்ட காலம் நிற்கும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் இதே அன்பு மற்றும் சகோதரத்துவத்தைத் தத்தமது நாட்டிற்கும் எடுத்துச் செல்வார்கள் என்று நான் நம்புகிறேன். இவ்வாறு மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைத்து நாட்டினரும் இந்த சூழலிலிருந்து பலன் பெறுவார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

அவர் கூறுகிறார்: மிகவும் அதிகமான மக்கள் மாநாட்டின் சூழலில் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் சில நாட்களைக் கழிக்க வேண்டும். அதன் மூலம் அன்பு மற்றும் சகோதரத்துவம் என்றால் என்ன என்பது தெரிய வரும். மேலும் இஸ்லாத்தின் உண்மை எந்த அளவுக்கு அழகு வாய்ந்தது என்பதும் தெரிய வரும்.

ஜப்பானிலிருந்து வந்த குழுவின் ஒரு பெண்மணி **யுகிகோ கோன்டோ** (Yukiko Kondo) சாஹிபா, நான் பெண்களுக்கு ஆற்றி உரை தொடர்பாகக் கூறுகிறார்: பெண்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் அறிவுரைகள் எப்படிப்பட்ட பாதுகாப்பு என்றால் அதன் நிழலின் கீழ் அஹ்மதிய்யத் முன்னேறிக் கொண்டிருக்கிறது. குடும்பங்களை ஒன்றிணைக்கவும், இயந்திர வாழ்க்கையிலிருந்து வெளிவருவதிலும் உலகின் மிக முக்கிய தேவையாக உள்ளது.

அவர் கூறுகிறார்: இன்றைய நாட்களில் மார்க்கத்தை விட்டு விலகும் ஆர்வம் உள்ளது. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்களிடத்தில் மார்க்கத் தொண்டாற்றும் உணர்வை நிலைத்திருக்கச் செய்யும் சக்தி என்னவாக இருக்கும் என்று சிந்தித்துக் கொண்டிருந்தோம். இந்த கேள்வி எங்களது சிந்தனையில் சுற்றிக் கொண்டிருந்தது.

ஆனால் மாநாட்டின் முதல் நாளே துஆவில் கலந்து கொண்டு மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் அறிவுரைகளைக் கேட்ட பின்னர் துஆ என்ற சக்திதான் அஹ்மதிய்யா ஜமாஅத்தையும் பிற ஜமாஅத்தையும் வேறுபடுத்திக் காட்டுகிறது

என்பதை புரிந்து கொண்டோம். மாநாட்டில் எங்களுக்கு மீண்டும் மீண்டும் துஆ செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. துஆவிற்குப் பிறகு எமது உள்ளமும் இலகுவானதை நாம் கண்டோம். ஆன்மாவிற்கு ஒரு புத்துணர்வு கிடைத்தது.

பிறகு கூறுகிறார்: மாநாட்டின்போது கால நிலை வெப்பமாக இருந்தது. ஆனால் கால நிலையின் கடினத்தின் காரணமாக மக்கள் களைப்படைந்ததை நாங்கள் காணவில்லை. பணியாளர்களின் முகத்தில் புன்சிரிப்பு முன்னுதாரணமாக இருந்தது. தண்ணீர் வழங்கிய சிறியவர்கள் முதல் Wash Room –களைச் சுத்தம் செய்தவர்கள் வரை அனைவரும் தன்னார்வ அடிப்படையில் தொண்டாற்றியவர்கள். அவர்களில் பெரும்பாலார் மகிழ்ச்சியுடன் தொண்டாற்றுகின்றனர் என்பதை அறிந்து நான் ஏக்கத்துடன் அவர்களைப் பார்த்தேன். மேலும் இறைவன் இவர்கள் அனைவர்களுடனும் திருப்தி கொள்வானாக என்று துஆ செய்தேன். ஏனென்றால் இவர்கள் பிறரது நிம்மதிக்காகத் தமது நிம்மதிகளத் தியாகம் செய்கின்றனர்.

குவாதே லூப்பை சேர்ந்த ஒரு புதிய அஹ்மதி **பேட்ரிஸ் மயிகோ** (Patrice Mayeko) சாஹிப் கூறுகின்றார்: நான் எனது வாழ்நாளில் இதுபோன்ற நிகழ்ச்சியைக் கண்டதில்லை. மாநாட்டின் நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் ஆரம்பமானது மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கக்கூடியதாக இருந்தது. சொற்பொழிவுகளின் பல்வேறு தலைப்புகள் காலத்தின் தேவைக்கேற்ப இருந்தன. குறிப்பாக எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தன.

மாநாட்டின் அனைத்து ஏற்பாடுகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் இயந்திரத்தைப் போன்று இருந்தது. அதன் ஒவ்வொரு பகுதியும் தத்தமது இடத்தில் இருந்தன. அனைத்துப் பணியாளர்களும் ஒன்று சேர்ந்து சிறந்த முறையில் அந்த இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு பணியாளரும் தமது பணியை அறிந்தவராகவும், புலமை பெற்றவராகவும் இருந்தார்.

பிறகு கூறுகிறார்: மாநாட்டில் நடத்தப்பட்ட அனைத்து கண்காட்சிகளும் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. குறிப்பாக ஆர்காய், மஜ்லிஹே தஸாவீர், ரிவியூ ஆஃப் ரிலீஜியன் கண்காட்சிகள் என்னை மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது. இந்த கண்காட்சிகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. இவை அஹ்மதிய்யத்தின் வரலாறு பற்றிய எனது அறிவை அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தன.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டதற்காக இன்னும் நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவனே எனக்கு இப்படிப்பட்ட அருளுக்குரிய ஜமாஅத்துடன் தொடர்பு கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கினான்.

அவர் கூறுகிறார்: இந்த மாநாட்டின் அனைத்து தனிச் சிறப்புகள் ஒருபுறம் இருந்தாலும் எனது சிறிய புரிதலுக்கேற்ப ஒரு குறையையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது என்னவென்றால், ஆங்கிலத்தோடு ஒப்பிடும்போது பிரெஞ்சு நிகழ்ச்சிகள் குறைவாக இருந்ததாக உணர்ந்தேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இதைக் கருத்தில் கொள்ளுங்கள். அதாவது பிரெஞ்சு நிகழ்ச்சி இருக்க வேண்டும் அல்லது மொழியாக்கமாவது இருக்க வேண்டும். இதுவும் அல்லாஹ்வின் அருளாகும். அதாவது குறைகளும் உடனுக்குடன் சுட்டிக் காட்டப்படுகின்றன.

ஜப்பானிலிருந்து வந்திருந்த ஒரு விருந்தினர் **யோஷீதா** (Yoshida) சாஹிபா. இவர் புத்த மதத்தின் Cheif Priest ஆவார். அவர் உலகளாவிய பைஅத் தொடர்பாகத் தனது கருத்துக்களை இவ்வாறு கூறுகிறார்: பைஅத் நிகழ்ச்சியைக் கண்டு நமது ஓர் இறைவன் உள்ளான். அவன் பக்கம் குனிந்தால் நிம்மதி கிடைக்கிறது என்பதை உணர்ந்தேன். பாவங்கள் கழுவப்படுகின்றன. மேலும் அனைத்து மனிதர்களும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒன்றாக ஆக விரும்பினால் ஆக முடியும்.

தொடர்ந்து அவர் கூறுகிறார்: பைஅத் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு எம்மை அறியாமலேயே எங்களது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. நாங்களும் சஜ்தாவில் விழுந்து விட்டோம். உண்மையிலேயே எங்களது பாவங்கள் கழுவப்பட்டதைப் போல் உணர்ந்தோம்.

பிறகு இந்தோனேஷியாவைச் சார்ந்த ஒரு அறிஞர் பேராசிரியர் கூறுகிறார்: மாநாடு நடத்தப்படுவது ஓர் மிகப்பெரும் வியப்பிற்குரிய நிகழ்ச்சியாகும். இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் வந்திருந்தனர். முழு உலகையும் ஒன்று சேர்த்து ஒரே உம்மத்தாக ஆக்கியது போன்று இருந்தது. இங்கு தன்னார்வத் தொண்டர்கள் பணி செய்வதைப் போன்று வேறு எந்த அமைப்பிலும் இதன் முன்னுதாரணம் கிடைக்காது.

அஹ்மதிய்யா ஜமாஅத் எல்லா களங்களிலும் தொண்டாற்றும் ஜமாஅத் என்பதற்கு இது ஒரு மிகப் பெரும் உதாரணமாகும். மாநாட்டின்போது எல்லா வகையான மனிதர்களோடும் சந்திப்பு நிகழ்ந்தது. அவர்களில் சிலர் மிகப் பெரிய மனிதர்களாவர். எல்லா பக்கமும் இஸ்லாமிய சகோதரத்துவத்தின் காட்சி தென்பட்டது. எல்லா பக்கமும் அமைதியின் தூதுச் செய்தியே இருந்தது.

அவர் கூறுகிறார்: விருந்து உபசரிப்பு பற்றி கூறுவது இயலாததாகும். பணியாளர்கள் விருந்தினர்களை மிகவும் கண்ணியப்படுத்துகின்றனர். மிகவும் முக மலர்ச்சியுடன் நடந்து கொள்கின்றனர். நாங்கள் எங்களுடைய வீட்டில் இருப்பதைப் போன்றே உணர்ந்தோம். மாநாட்டின் சொற்பொழிவுகளை ஒவ்வொருவரும் மிக எளிமையாகப் புரிய முடிந்தது.

அவர் கூறுகிறார்: இதுபோன்ற மகத்தான மாநாடுகளை இந்தோனேஷியாவிலும் நடத்த வேண்டும் என்பது எனது ஆலோசனை ஆகும். அதில் காலத்தின் கலீஃபாவும் கலந்து கொள்ள வேண்டும். இது மிகவும் பெருமைக்குரிய விஷயமாக இருக்கும். ஆண்டு மாநாட்டை நடத்த விரும்பினால் உங்களுடைய நாட்டைச்ச சம்மதிக்க வையுங்கள். ஆனால் அவர்களோ அஹ்மதிய்யத்தை எதிர்ப்பதில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

பிறகு இந்தோனேஷியாவின் ஒரு பெண் விருந்தினர். இவர் முஸ்லிம் பெண்கள் அமைப்பின் தலைவர் ஆவார். அவர் கூறுகிறார்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பல நூல்களைப் படித்து விட்டேன். ஜமாஅத்தைப் பற்றிய போதுமான அறிவு உள்ளது. மாநாட்டில் கலந்து காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகளை எனது காதுகளில் கேட்ட பிறகு மிகவும் தாக்கத்திற்குள்ளனேன். உண்மையிலேயே அஹ்மதிய்யா ஜமாஅத்தினர் ஆலிமாக இருப்பதுடன் செயல்களையும் உடையவர்கள் ஆவர்.

எவ்வாறு மக்கள் கூர்ந்து கவனத்துடன் காலத்தின் கலீஃபாவின் கூற்றுக்களைக் கேட்கின்றனர் என்றால் அந்த காட்சிகளைக் கண்டு அறிவு வியக்கிறது. அஹ்மதிய்யா ஜமாஅத் நிராகரித்தலிலும் வழிகேட்டிலும் உள்ளது என மக்கள் கூறுகின்றனர். மேலும் மற்றவர்களையும் வழிகெடுக்கிறது என்கின்றனர்.

ஆனால் உண்மை என்னவென்றால், இவர்கள்தான் உண்மையான முஸ்லிம்களாவர். தொழுகைகளைப் பேணக் கூடியவர்களும், இறைவனுக்குரிய உரிமைகளையும் மனிதர்களுக்குரிய உரிமைகளையும் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுகிறார்கள்.

ஒருவர் மற்றவருக்குக் கண்ணியமளிக்கின்றனர். பேசுவதற்கு முன்னர் அஸ்ஸலாமு அலைக்கும் என்கின்றனர். ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் ஒழுங்கமைப்பு மற்றும் கட்டுப்படுதலைப் பேணுகின்றனர். ஒவ்வொரு தன்னார்வத் தொண்டரும் தத்தமது பொறுப்புகளை تَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى அதாவது நன்மையிலும் இறையச்சத்திலும் ஒத்துழைப்புடன் செயல்படுங்கள் என்ற போதனைக்கேற்ப நிறைவேற்றுகின்றனர். இந்த அனைத்து காட்சிகளையும் கண்டு நான் தாக்கத்திற்குள்ளானேன்.

அவர் கூறுகிறார்: இந்த அனைத்தும் கிலாஃபத்தின் அருள்கள் மற்றும் காலத்தின் இமாமிற்குக் கட்டுப்படுதலின் விளைவு போல் தோன்றுகிறது. (இந்தப் பெண்மணி அஹ்மதி அல்ல.)

இந்தோனேஷியாவின் ஓர் அஹ்மதி அல்லாத அறிஞர். அங்குள்ள பல்கலைக்கழகத்தின் தத்துவவியல் துறையின் தலைவரும் ஆவார். அவர் கூறுகிறார்: நான் முதன் முறையாக எப்படிப்பட்ட ஒரு சபையைக் கண்டேன் என்றால் எவ்வகையிலும் எல்லாக் கோணத்திலும் ஆன்மீக விவகாரங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. நான் இந்த மாநாட்டை ஒரு பொன்னான மாநாடாகக் கருதுகிறேன்.

அவர் கூறுகிறார்: ஏனென்றால் இதில் முழு உலகிலிருந்தும் மக்கள் கிலாஃபத்தைச் சுற்றிலும் மின்மினிப் பூச்சுகளைப் போல் ஒன்றிணைத்துள்ளனர். நான் ஒரு இந்தோனேஷியன் என்ற அடிப்படையில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் முயற்சிகளைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து சகோதரத்துவத்தின் காட்சியை எடுத்துக் காட்டியுள்ளார்கள். உண்மையில் கிலாஃபத் தான் இந்தப் பணியை அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதற்காக அனுப்பப்பட்டார்களோ அப்பணியை முன்னெடுத்துச் செல்கிறது. காலத்தின் இமாம் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பினை இவர்களுக்கு வழங்குவானாக.

பிறகு கூறுகிறார்: இதுவே உண்மையான இஸ்லாம் ஆகும். இதுவே உண்மையான சகோதரத்துவமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் எப்படிப்பட்ட ஒரேயொரு உலகளாவிய அமைப்பு என்றால் இதைப் போன்ற முன்னுதாரணம் எங்கும் கிடைப்பதில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மோட்டோ மிகவும் சிறப்புமிக்கதாகும். அது ஒவ்வோர் உள்ளத்திலும் ஆணிகளைப் போல் அறையப்பட்டு விடுகிறது.

காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு சொற்பொழிவிலும், திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தின் ஒளியில் மிகவும் சிறந்த முறையில் இஸ்லாமிய போதனைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மாநாடு வெறும் மூன்று நாட்கள் மட்டும்தான். ஆனால் இந்த மூன்று நாட்கள் அருள்களின் அடிப்படையில் நிரம்பியவை. இதற்காக நாங்கள் அவற்றிற்கு மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநாட்டில் கலந்து கொண்ட கினிகனாகரியிலுள்ள ஒரு மாநிலத்தின் கவர்னர் சாதாங்கு பேகுமாரா சாஹிபா கூறுகிறார்: இதை விட சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சியை இதற்கு முன் கண்டதில்லை. அனைத்து நாடுகளிலிருந்தும் எல்லா நிற இன மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். அவர்கள் மிகச் சிறந்த இஸ்லாமிய முன்மாதிரியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். அன்பு நேசத்தின் அசாதாரணமான வெளிப்பாடு ஆகும். அது வெறும் சொல்லளவில் மட்டும் இருக்கவில்லை. மாறாக, செயலளவில் காணப்பட்டது; அது உணரப்பட்டது. தேவைப்படும் அனைத்து பொருள்களும் எப்போதும் கிடைத்து வந்தன.

அவர் கூறுகிறார்: எனக்கு அனைத்துச் சொற்பொழிவுகளையும் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் காலத்தின் தேவைக்கேற்ப தயார் செய்யப்பட்டிருப்பதைப் போன்று உணர்ந்தேன். குறிப்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவுகள் அசாதாரணமானவைகளாக இருந்தன.

விருந்து உபசரிப்பவர்களுக்கும், விருந்தினர்களுக்கும் வழங்கிய வழிகாட்டல்களின்படி செயல்படுவதால் தேவையில்லாமல் ஏற்படும் நமது பிரச்சனைகள் அன்பு மற்றும் நேசத்துடன் தமது வட்டத்திற்குள் இருந்தவாறு தீர்ந்து விடும்.

அவர் கூறுகிறார்: இந்த மூன்று நாட்களில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட ஜமாஅத் மற்றும் ஓர் இமாமின் சைகையில் செயல்படும் ஜமாஅத் என்பதைப் புரிந்து கொண்டேன். மேலும் இதுவே இஸ்லாத்தின் அழகிய போதனைகள் ஆகும். இதன்படி செயல்படுவதால் நாம் இன்று ஒரே ஜமாஅத்தாக ஆக முடியும்.

இறுதியில் கூறுகிறார்: நான் துஆவிற்காகவும் விண்ணப்பித்துக் கொள்கிறேன். அல்லாஹ் எங்களுடைய நாட்டிலும் அமைதியை நிலவச் செய்வானாக. மேலும் உண்மையான இஸ்லாம் நிறுவப்படட்டுமாக.

ஹோன்ட்ரோஸின் ஒரு பத்திரிகையாளர் **மெனோலோ ஜோஸ் ஸ்கோடோ** (Manolo Jose Escoto). இவர் ஒரு டி.வி சேனலுடன் தொடர்புடையவர். இவர் கூறுகின்றார்: எனக்கு ஒரு முஸ்லிம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைப்பு விடுக்கப்பட்டபோது ஆராய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஏனென்றால் முஸ்லிம் தொடர்பாக உலகளாவிய அளவில் குறைவான அறிவின் காரணமாக தீய மற்றும் எதிர்மறையான கருத்துக்களே வெளிப்படுத்தப்பட்டன.

ஆனால் இந்த எதிர்மறையான கருத்துக்கு காரணம் அதைப் பற்றிய அறிவு குறைவாக இருப்பதே ஆகும் என்பதை மிக வலுவாகக் கூற விரும்புகிறேன். என்னைப் போன்ற ஆயிரக்கணக்கானோர் முஸ்லிம்களின் உண்மையான போதனை மற்றும் உணர்வுகளை அறியாவர்களாக உள்ளனர். இப்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக இஸ்லாத்தைப் பற்றி அதிகமாகக் கற்றுள்ளேன்.

மாநாட்டின் சூழலிலிருந்து மக்களைப் பற்றி ஏதேனும் வெறுப்பின் கருத்து கொள்வதற்கு முன் அவர்களை தனிப்பட்ட முறையில் அறிவது அவசியமாகும் என்ற விஷயம் புரிய வந்தது. மாநாட்டின் முக்கிய தூதுச் செய்தி அமைதியின் தூதுச்செய்தி ஆகும். இதேபோல் நல்ல அனுதாப உணர்வு கொண்ட கண்ணியமளிக்கக்கூடிய மக்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் அனைத்து விருந்தினர்களுக்கும் தங்களுடைய உள்ளத்தை திறந்திருந்தார்கள்.

குயேட்டாமாலாவின் ஒரு பெண் பத்திரிகையாளர் **கிளாடீஸ் ரமிரஸ்** (Gladys Ramirez) கூறுகின்றார்: பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு எனக்கு அசாதாரண மகிழ்ச்சி கிடைத்தது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இஸ்லாம் பற்றிய தவறான எண்ணங்கள் நீங்கின. உண்மையான இஸ்லாமிய போதனைகளைப் பற்றி தெரிய வந்தது. எனது உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பியுள்ளது.

மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் என்னோடு மிகுந்த அன்புடனும் கண்ணியத்துடனும் நடந்து கொண்டனர். ஒரு பெண் என்ற நிலையில் நான் எனது வீட்டை விட்டு வெளியே இருப்பதாகவோ அல்லது தனித்திருப்பதாகவோ ஒரு நொடிப்பொழுது கூட உணரவில்லை. மாறாக, அதற்கு நேர்மாற்றமாக இங்கு என்னைப் பாதுகாப்புள்ளவளாகவும் மற்றவர்களின் பார்வையில் கண்ணியமிக்கவளாகவும் உணர்ந்தேன்.

சகோதரத்துவம் மற்றும் அன்பின் செயல் முன்மாதிரியைக் கண்டேன். உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து அனைவரும் ஒருவர் மற்றவரோடு அனுதாபம் காட்டக் கூடியவர்களும் அன்பு செலுத்தக் கூடியவர்களும் ஆவர் என்பதை உணர்ந்தேன். அவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசினாலும் அவர்களின் செயல் முன்மாதிரி மொழிகளின் வேறுபாட்டை மறக்கடித்து விட்டது.

அவர் கூறுகிறார்: நான் இந்த அமைதி நிறைந்த சமூகத்தால் சிறந்த தாக்கத்திற்குள்ளாகி உள்ளேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தினர் உண்மையில் அமைதியை நிலைநாட்டுகின்றனர் என நான் உறுதியாக நம்புகிறேன்.

அங்கிருந்து டி.வி சேனலின் ஃபோட்டோ கிராஃபர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: மறக்க முடியாத அனுபவமாகும். பணியாளர் முதல் அதிகாரி வரை அனைவரும் நல்ல உணர்வுப்பூர்வமாகவும் அன்புடனும் நடந்து கொண்டனர். மாநாட்டின் ஏற்பாடுகளும் சொற்பொழிவுகளும் எனது அறிவுக்கு ஒளியூட்டின. உண்மையான முஸ்லிம் யார் என்பதை நீங்கள் செயலளவில் காட்டி விட்டீர்கள்.

அவர் கூறுகிறார்: 2015 –லும் ஜமாஅத்துடன் அறிமுகம் ஏற்பட்டது. ஆனால் இங்கு வந்து எனது வீட்டில் இருப்பதாக உணர்கிறேன். மனிதன் என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் பிறருடன் கண்ணியத்துடன் நடந்து கொள்வது கடமையாகும். மேலும் தேவை உடையவருக்கு உதவ வேண்டும்.

அவர் கூறுகிறார்: மாநாட்டிலிருந்து நான் கற்ற பாடம் என்னவென்றால் அனைவரும் ஒன்றிணைந்து சகோதரத்துவத்துடனும் அன்புடனும் பணியாற்றினால் மகத்தான பணிகளைச் செய்ய முடியும்.

மெக்ஸிகோவிலிருந்து வந்திருந்த ஒரு புதிய அஹ்மதி **எலிஸபெத் பரேரா** (Elizabeth Parera) சாஹிபா கூறுகிறார்: நான் அஹ்மதியாகி ஒரு வருடம் மட்டுமே ஆகின்றது. நான் இஸ்லாத்தைப் பற்றி கற்கிறேன். இஸ்லாம் எப்படிப்பட்ட மார்க்கம் என்றால் இது எங்களது நாட்டில் நல்ல கண்ணோட்டத்துடன் பார்க்கப்படுவதில்லை.

அதற்கு காரணம் மீடியா ஆகும். ஆனால் இஸ்லாம் அமைதியின் மார்க்கம் என்பதை நான் அறிவேன். ஆனால் எனது வீட்டில் உள்ளவர்கள் என்னை இங்கு வரவிடாமல் தடுத்தனர். மேலும் என்னைப் பயமுறுத்தினர். ஆனால் இங்கு வந்த பிறகு நான் நேர்மாற்றமானதைக் கண்டேன்.

அவர் கூறுகிறார்: விமானத்திலிருந்து வரவேற்பது முதல் மாநாட்டின் மூன்று நாட்களும் தன்னார்வத் தொண்டரிடம் நான் பார்த்த உணர்வினால் மிகவும் தாக்கத்திற்குள்ளாகி உள்ளேன். இப்போது ஜமாஅத்தின் சகோதரத்துவ அமைப்பு பற்றி எனது உள்ளத்தில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அவர் கூறுகிறார்: நான் எடுத்துச் செல்லும் சிந்தனைகளை மெக்ஸிகோவுக்கு திரும்பிச் சென்று பயன்படுத்துவேன். மக்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பேன்.

பிறகு மெக்ஸிகோவின் ஒரு புதிய அஹ்மதி பெண் **லவ்ரா பிரேத்தோ சொபெரானிஸ்** (Laura Brito Soberanis) சாஹிபா கூறுகின்றார்: தன்னார்வத் தொண்டர்கள் சில வேளைகளில் எனது பேச்சைப் புரிய முடியாதிருந்தனர். ஆனால் எனக்கு இங்கு வந்த பிறகு தான் மொழிகளிலேயே உள்ள வேறுபாடு அஹ்மதிகளிடையே உள்ள உறவில் தடையாக இருக்க முடியாது. இறைவனின் அன்பு நம்மை ஒன்றாக்கி விட்டது. நான் எனது வீட்டில் உள்ளவர்களுடன் இருப்பதைப் போல் உணர்கிறேன். காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகளைக் கேட்டு என்ன குறை உள்ளது என என்னை நான் ஆராய்ந்து பார்த்தேன். மேலும் இப்போது நான் சரியான இடத்தில்தான் இருக்கிறேன் என்ற நிச்சய உறுதி உள்ளது.

இறைவன் எனக்கு நேர்வழிக்கான பாதையைக் காண்பித்திருக்கிறான். எவ்வாறு என்னுடைய ஈமான் வலுவடைந்து விட்டதோ அதேபோல் என்னுடைய வீட்டிலுள்ளவர்களும் இஸ்லாத்தைப் பற்றி அறிய வேண்டும். அவர்களின் ஈமானும் வலுப்பெற வேண்டும் என்பது எனது உள்ளத்து ஆசையாகும்.

பிறகு கேமரூனிலிருந்து **மபூஹோ அஸீஸ்** (Mbohou Azize) சாஹிப் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: நான் கடந்த ஆண்டும் மாநாட்டில் கலந்து கொண்டேன். இந்த முறை முன்பை விட எல்லா துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் தங்கும் வசதிகளுக்கான ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக இருந்தன. உணவிற்கான ஏற்பாட்டைப் பார்க்கும்போது மிகவும் வியப்பு ஏற்படுகிறது. இவ்வளவு பெரிய கூட்டத்திற்கு இரண்டு மணி நேரத்தில் உணவு வழங்கி அனுப்பி விடுகின்றனர். எந்த சண்டை சச்சரவும் இல்லை. ஒவ்வொருவரும் குறித்த நேரத்தில் மாநாட்டுத் திடலுக்குச் செல்கின்றனர். நிகழ்ச்சிகளைக் கேட்கின்றனர்.

இது எப்படிப்பட்ட ஒன்றென்றால் உலக நிகழ்ச்சிகளில் தென்படாது. குத்தாம்கள் எந்த அளவு அன்புடனும் நேசத்துடனும் உணர்வுடனும் பணியாற்றுகிறார்கள் என்றால் அதன் முன்னுதாரணம் காணக் கிடைப்பதில்லை. எந்த ஜமாஅத்தில் இப்படிப்பட்ட அர்ப்பணிக்கும் ஆன்மா உடையவர்கள் இருப்பார்களோ அந்த ஜமாஅத் அப்போது முன்னேறும்.

அவர் கூறுகிறார்: தொழில் ரீதியில் நான் ஒரு பத்திரிகையாளர். M.T.A –வின் பணியாளருடன் ஒரு சந்திப்பு நடைபெற்றது. அங்கும் எங்களுக்கு மிகுந்த இன்பம் கிடைத்தது. எங்களுடைய தேவைக்கான அனைத்தும் அங்கிருந்தன. அவை உலகின் தனியார் மற்றும் அரசாங்க அமைப்புகளிடம் கூட இருக்காது. ஜமாஅத்தின் தூதுச் செய்தி மற்றவர்கள் வரை எவ்வாறு சென்றடைகிறது என்பது ஒரு அந்நிய விருந்தினரின் தாக்கம் மூலம் தெரிய வந்தது. ஒவ்வொருவரும் ஜமாஅத்தின் அன்பு மற்றும் நேசத்தின் போதனைகளைப் போற்றினர்.

அவர் கூறுகிறார்: காலத்தின் கலீஃபா பெண்களிடம் ஆற்றிய உரை நமது புதிய தலைமுறையின் தர்பிய்யத்திற்கு மிகவும் அவசியமானதாகும். சோஷியல் மீடியாவை எந்த அளவுக்கு பயன்படுத்த வேண்டும் என்ற அனைத்தும் இக்காலத்தின் அவசியத் தேவையாகும். நாம் நமது குழந்தைகளை இந்த சூழலிலிருந்து காப்பாற்றவில்லை என்றால் பிறகு அவர்கள் மனித நேயம் மற்றும் இஸ்லாத்தை விட்டு வெகு தூரம் சென்று விடுவார்கள். நாம் இந்தப் போதனையைப் பின்பற்றியே ஆக வேண்டும்.

பிறகு கூறுகிறார்: இறுதி உரையில் தாங்கள் ஆற்றிய ஃபஹ்ஸாவின் விளக்கம் அது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அதன் பொருளைக் கேட்டு நாம் அனைவரும் இந்த தீமையில் உள்ளோம் என்பது போல் இருந்தது. பலர் நல்லவர் என்று அறியப்படுகிறார்கள். ஆனால் அவர்களின் செயல்கள் நல்லதாக இருப்பதில்லை. காலத்தின் கலீஃபாவின் இந்த சொற்பொழிவை நாம் கேட்டால் பிறகு அதன்படி செயல்பட்டால் பிறகு நமது புதிய தலைமுறைக்கு ஒரு தூய சமூகத்தை வழங்க இயலும்.

ஃபஹ்ஷா என்ற சொல்லின் விளக்கம் என்னை உலுக்கி விட்டது. இது எப்படிப்பட்ட சிறந்த கருத்து என்றால் இதை நான் எனது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்வேன்.

அவர் கூறுகிறார்: நால் பல்வேறு கண்காட்சிகளைக் கண்டேன். ஜமாஅத்தின் வரலாற்றின் மூலமாக எந்த சமுதாயங்கள் தனது வரலாற்றை மறப்பதில்லையோ அவைகள் எப்போதும் முன்னேறிக் கொண்டே செல்கின்றன. ரிவியூ ஆஃப் ரிலீஜியன் ஒரு நூற்றாண்டாக தூதுச் செய்தியைச் சென்றடையச் செய்து வருகிறது. நானும் முறையாக இதைப் படித்து வருகிறேன். அதில் மிகவும் உயர் தரமான கட்டுரைகள் உள்ளன. Humanity First –ன் தொண்டுகளும் முன்னுதாரங்கள் அற்றவையாகும்.

ஐஸ்லாந்தின் குழுவிலுள்ள ஒரு பெண் விருந்தினர் **எமிலெத்தா ஒர்டோனேஸ்** (Emelita Ordonez) சாஹிபா கூறுகின்றார்: மாநாட்டில் கலந்து கொண்டதால் எனது அறிவு மிகவும் அதிகரித்துள்ளது. நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சிறந்த முறையில் புரியத் தொடங்கி விட்டேன். உலகம் முழுவதும் இருந்து வந்துள்ள மக்களைச் சந்திப்பது மற்றும் அவர்களிடம் பேசுவது மிகவும் உள்ளம் கவரக் கூடியதாக இருந்தது. எல்லாப் பக்கமும் அமைதி, அன்பு மற்றும் சகோதரத்துவத்தை நான் உணர்ந்தேன்.

மாநாட்டின் சொற்பொழிவுகள் ஈமானுக்க வலுவூட்டக் கூடியவையாக இருந்தன. கண்காட்சிகளைப் பார்த்து மிகவும் இன்பமாக இருந்தது. கண்காட்சியில் ஹஹீதுகளின் புகைப்படைங்களைப் பார்த்து துக்கமும் ஏற்பட்டது. ஏனென்றால் இந்த அநீதி மார்க்க வேறுபாட்டின் காரணமாக மட்டுமே செய்யப்பட்டுள்ளது; செய்யப்படுகிறது. மூன்றாவது நாள் பைஅத்தின் நிகழ்வு உள்ளத்தில் ஒரு அசாதாரணமான தாக்கத்தை விட்டுச் சென்றுள்ளது. மேலும் பலவற்றின் தாக்கத்தை வார்த்தைகளில் எடுத்துக் கூறுவது இயலாததாகும்.

மெசடோனியாவிலிருந்து ஒரு பத்திரிகையாளர் **டோனி அஜ்டோஸ்கி** (Toni Ajtovski) சாஹிப் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: மாநாட்டில் நான் எல்லாவற்றிற்கும் அதிகமாகத் தாக்கத்திற்குள்ளான விஷயம் காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகளாகும். குறிப்பாக குழந்தைகளின் தர்பிய்யத் மற்றும்

கண்காணித்தலின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக மொபைல் பயன்பாடு தொடர்பாகக் கூறினார்கள். எவ்வாறு இவைகள் குடும்பத்தின் ஒற்றுமையைச் சீர்குலைக்கின்றன போன்றவை உலகளாவிய தூதுச் செய்தியாகும்.

உலகின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இந்தப் பிரச்சனைகளே முன் நிற்கின்றன. ஒரு குடும்பம், குடும்பம் என்ற ரீதியில் ஒன்றாக இருக்கவில்லை என்றால் அவர்களிடம் தொடர்புகள் இல்லாமல் இருக்கும் என்றால் குடும்பம் சிதறி விடுகிறது. குடும்பம் சிதறுவதால் முழு சமூகமும் அதன் ஒற்றுமையும் சீர்குலைகிறது. மேலும் சிறந்த எதிர்காலத்தின் உத்திரவாதம் இருப்பதில்லை.

பிலிப்பைன்ஸிலிருந்து **ஜார்ஜ் கேரினோ** (Jorge Carino) சாஹிப் வந்திருந்தார். ABS-CBN டி.வி சேனலின் புகழ்பெற்ற காலை நிகழ்ச்சியின் நெறியாளராக இருக்கும் இவர் கூறுகின்றார்: இவ்வளவு எண்ணிக்கை இத்தனை நாடுகளிலிருந்து வந்த பல்வேறு இன நிற மக்களைப் பார்த்தது எனது வாழ்நாளில் இதுவே முதன் முறையாகும்.

ஒவ்வொருவரும் அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் ஒருவர் மற்றவரை அறிந்திருந்தாலும் அறியா விட்டாலும் ஒருவர் மற்றவரைப் பார்த்து சிரிப்பார்கள். ஸலாம் கூறுவார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் ஒன்றிணைந்ததன் நோக்கம் அன்பு மற்றும் மனித நேயத்தை பரப்புவதாகும்.

அவர் கூறுகிறார்: ஒரு பத்திரிகையாளர் என்ற அடிப்படையில் எல்லா மாநாடுகளையும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் எந்த அளவு நிம்மதி, பொறுமை மற்றும் ஒழுங்கு யூ.கே மாநாட்டில் காணப்பட்டதோ அதன் உதாரணத்தை இதற்கு முன்னர் நான் ஒருபோதும் கண்டதில்லை. தன்னார்வத் தொண்டர்கள் எந்த அளவுக்கு கண்ணியத்துடன் எங்களுடன் நடந்து கொண்டார்கள் என்றால் எங்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டார்கள். இவை என்னுடைய உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அவர் கூறுகிறார்: போக்குவரத்து கட்டுப்பாடாக இருந்தாலும் சரி வெப்பத்தை தணிக்க பானங்கள் வழங்குவதாக இருந்தாலும் சரி சின்னஞ் சிறுவர்கள் மிகவும் கடின உழைப்புடன் தங்களது பொறுப்புகளை நிறைவேற்றியதால் இந்த மாநாட்டில் கலந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சி. ஏனென்றால் இந்த மாநாடு எனது சிந்தனையை முன்பை விட அதிகமாகத் திறந்து விட்டது.

எனக்கு புதியதொரு கண்ணோட்டத்தை வழங்கியுள்ளது. மேலும் இந்த வகையில் மாநாடு எனது வாழ்க்கையில் ஒரு மைல் கல்லைப் போன்றதாகும். இதன் மூலம் எனக்குப் புதியதொரு கலாச்சாரத்தைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. (இது பிலிப்பைன்ஸின் காலாச்சாரத்தை விட மாறுபட்டதாக இருக்கிறது.

பிறகு ஒரு யுனானி விருந்தினர் **மார்ஸியா** சாஹிபா கூறுகிறார்: இந்த அனுபவத்தை சொற்களில் எடுத்துரைப்பது முற்றிலும் சாத்தியமில்லாததாகும். துஆ செய்யக்கூடிய 38 ஆயிரம் மக்களோடு சேர்ந்து கிடைக்கும் அனுபவத்தை வார்த்தைகயில் கூற இயலாது. மாநாட்டின்போது எல்லாரிடமிருந்தும் கிடைத்த கருணை மற்றும் அன்பின் உணர்வுகள் மிகவும் தாக்கத்திற்குள்ளாக் கூடியதாக இருந்தது.

எவ்வாறு மனித குலம் அமைதியின் உலகின் புதிய காலக்கட்டத்தில் சகோதரத்துவத்தில் ஒருவர் மற்றவரை ஏற்றுக் கொண்டவாறு நுழையும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்ற எனது நம்பிக்கை மேலும் அதிகமாகி விட்டது. நம்மிடம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் மனித நேயத்தின் முன்னேற்றத்தில் இந்த தரமான நடவடிக்கைகள் பலனளிக்கும்.

பிறகு கனடாவிலிருந்து Indigenous (உள்நாட்டு) மக்கள் அதாவது First Nations (முதல் நாடுகள்) என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள், தங்கள் தலைகளில் பெரிய பெரிய கலாச்சார கிரீடம் போன்றவற்றை அணிந்திருந்தனர். அவர்களின் மூன்று கோத்திரங்களின் Chief (தலைவர்) மற்றும் அவர்களின் ஒரு Youth Leader–ம் (இளைஞர் தலைவர்) கலந்து கொண்டார்.

இவர்களின் Youth Leader **மேக்ஸ் ஃபைன்டே** (Max Fineday) கூறுகிறார்: மாநாட்டில் குத்தாம்கள் தன்னார்வ அடிப்படையில் தொண்டாற்றியது மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது. நாங்கள் திரும்பிச் சென்று விரைவாகவே அஹ்மதி Youth மற்றும் First Nations –ம் இணைந்து நிகழ்ச்சிகளை நடத்துவோம். அஹ்மதி இளைஞர்களைப் போன்ற ஒழுங்கை நான் வேறெந்த சமுதாயத்திலும் கண்டதில்லை. அவர்கள் எந்த அளவு புலமையுடன் பணிகளைச் செய்கிறார்கள் என்றால் அதற்கான உதாரணமும் கிடைப்பதில்லை.

குத்தாம் நினைவில் கொள்ளுங்கள். இந்தப் பாராட்டுகள் அவர்களை மேலும் தொண்டாற்றுவதன் பக்கம் கவனமூட்டக் கூடியதாக இருக்க வேண்டும்.

பிறகு ஒரு Chief **ரோகர் ரெட்மேன்** (Roger Redman) கூறுகிறார்: எனக்கு புகைப் பிடிக்கும் பழக்கம் அதிகமாக இருக்கிறது. நாங்கள் புகையிலையையும் பொதுவாக அதிகமாகப் பயன்படுத்துகிறோம். எங்களுடைய சமூகத்தில் புகை பிடிப்பது மற்றும் புகையிலை பயன்படுத்துவது First Nations –ன் ஒரு மார்க்க அம்சமாகும். மேலும் புகையிலை பயன்படுத்துவது ஆன்மீகத்தில் குறிப்பான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது எங்களது நம்பிக்கையாகும்.

ஆனால் மாநாட்டின்போது காலத்தின் கலீஃபா ஜமாஅத் மக்களிடம் புகை பிடிப்பதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்று கூறியபோது நானும் மாநாட்டின் நாட்களில் புகை பிடிப்பதை விட்டு விடுவேன் என்று உறுதிமொழி எடுத்தேன்.

பிறகு இவர் தமது உறுதிமொழியில் நிலைத்தும் இருந்தார். இதில் அஹ்மதிகளுக்கும் படிப்பினை உள்ளது.

எவ்வாறிருப்பினும், ஒருவர் என்னிடம் கூறினார்: 10, 12 மணி நேரம் விமானங்களில் புகைபிடிக்க இயலாது. அப்போது பொறுமை செய்கிறார்கள் என்றால் மாநாட்டில் பொறுமையை மேற்கொண்டால் நற்கூலியும் கிடைக்கும் என்றார்.

பிறகு கூறுகிறார்: காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்ட பிறகு இஸ்லாத்தின் போதனை அன்பு செலுத்துவது, அமைதியைப் பரப்புவது மற்றும் மனித குலத்துடன் அனுதாபத்தோடு நடந்து கொள்வது என்றால் நீங்கள் உங்களுடைய சொற்பொழிவில் கூறியது போன்று அவ்வாறுதான் என்றால் கண்டிப்பாக ஓர் அஹ்மதி முஸ்லிமாக ஆக விரும்புவேன்.

பிறகு Chief இதனையும் கூறினார்: ஏதேனும் வாக்குறுதி வழங்குவதற்கு முன் தமது பெரியவர்களுடன் ஆலோசனை செய்வோம். ஏனென்றால் சம்பிரதாயங்களையும் மிகவும் பேணுகின்றனர்.

பிறகு First Nations –ன் ஒரு Chief **லீ க்ரவ்சைல்டு** (Lee Crowchild) கூறுகிறார்: இந்த மாநாட்டில் கிடைத்த அன்பு எங்களுடைய நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமையான போதனைகளைப் போன்று இருக்கிறது. நாம் எவ்வாறு ஒருவர் மற்றவரோடு சகோதரத்துவத்தோடும் அன்போடும் இருந்து வந்தோம். எங்களது அனைத்துத் தேவைகளும் நிறைவேற்றப்பட்டன.

அவர் கூறுகிறார்: முஸ்லிம்கள் தொடர்பாக அமெரிக்கர்கள் ஒரு கருத்து கொண்டுள்ளனர். மேலும் கனடாவைச் சேர்ந்தவர்கள் வேறொரு கருத்து கொண்டுள்ளனர். ஆனால் மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், நம்மில் சிலர் கூட முஸ்லிம்கள் தொடர்பாக நேர்மறையான கருத்துக்களைக் கொண்டிருப்பதில்லை. ஆனால் இப்போது நாமே நமக்கு எதிரிகளாவோம் என்பதைப் புரிகிறேன்.

அவர் கூறுகிறார்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பார்த்தது என்னவென்றால், இவர்கள் பிறருடன் சண்டையிடுவதில்லை.

பிறருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதில்லை. மேலும் ஒருவர் மற்றவருக்கெதிராகவும் பேசுவதில்லை. மக்களின் இந்த உயர் முன்மாதிரிகள் தான் மக்களை தாக்கத்திற்குள்ளாக்குகின்றன.

ஸ்பெயின் குழுவைச் சேர்ந்த **எமிலோ லோபஸ்** (Emilo Lopaz)சாஹிப் கூறுகிறார்: முதன்முறையாக மாநாட்டில் கலந்து கொண்டேன். அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் எனக்கு ஆழமான தொடர்பு உள்ளது. மாநாடு மிகவும் உள்ளம் கவரக்கூடியதாக இருந்தது. பிறருக்கு சகிப்புத்தன்மை, அமைதி மற்றும் கண்ணியம் பற்றிய தூதுச் செய்தி இருந்தது. இதேபோன்று பிற மார்க்கங்கள் மற்றும் மனித குலத்திற்கு மதிப்பளித்தல் பற்றிய வினோதமான தூதுச் செய்தியாகும். அஹ்மதிய்யத்தின் உதாரணம் உயிரோடு வைக்கப்பட வேண்டியதாகும். அந்தோ! இந்தக் கலப்பற்ற தன்மையையும் நல்லொழுக்கத்தையும் எல்லாரும் மேற்கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

பிறகு ஸ்பெயின் குழுவைச் சேர்ந்த ஒருவர் ஒரு பத்திரிகையில் பணியாற்றுகிறார். அவர் கூறுகிறார்: மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரிடமும் நல்லொழுக்க முன்மாதிரி மற்றும் உங்களுடைய நல்ல விஷயங்களை எடுத்துரைப்பது எனக்கு Key Point ஆகும்.

பிறகு ஸ்பெயினைச் சேர்ந்த இன்னொருவர் கூறுகிறார்: எனக்கு உங்களை ஆழமாகப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. மிக மேலான விருந்து உபசரிப்பு மற்றும் சொற்பொழிவுகள் மிகவும் உள்ளம் கவரக்கூடியவைகளாக இருந்தன.

ஸ்பெயினைச் சேர்ந்த ஒருவர் எழுதுகிறார்: மாநாட்டில் கலந்து உண்மை இஸ்லாத்திற்கும் தீவிரவாதத்திற்கும் தூரம் அதிகம் என்ற நிச்சய உறுதி ஏற்பட்டு விட்டது.

ஜமைக்காவிலிருந்து ஜமாஅத் அல்லாத ஒரு பெண்மணி **உயேடா நெஸ்பெத்** (Ouida Nesbeth) சாஹிபா மாநாட்டில் கலந்து கொண்டார்கள். கணக்கர் மற்றும் படித்தறிந்த பெண்மணி ஆவார்கள். இவர் கூறுகிறார்: கடந்த 5 ஆண்டுகளாக அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டுள்ளேன். இந்தக் காலக்கட்டத்தில் போதுமான அளவு ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்திருந்தது. ஆனால் மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு அதில் ஒரு பரந்த தன்மை ஏற்பட்டுள்ளது. இஸ்லாம் தொடர்பாக எனக்கு இருந்த அத்தனை சந்தேகங்களும் நீங்கி விட்டன. ஆண்களும் பெண்களும் தனித்தனியாக இருந்தது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஒரு பக்கம் ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஆனால் பெண்களுக்கு இது பிடித்திருக்கிறது. ஒன்றாக இருக்கும்போது ஆண்களின் பார்வை சரியாக இருப்பதில்லை என்பதை அவர்களே ஏற்றுக் கொள்கின்றனர்.

அவர் கூறுகிறார்: ஆண்களும் பெண்களும் தனித்தனியாக இருந்ததனால் மக்களின் கவனம் சிதறுவதில்லை. மக்கள் இஸ்லாம் மற்றும் இறை வணக்கத்தின் பக்கம் அதிக கவனம் செலுத்த முடிகிறது. எனவே ஏதேனும் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகும் அஹ்மதி பெண்களும் சிந்திக்க வேண்டும்.

இத்தாலியின் பேராசிரியயை ***ரிஃபாயிலா*** (Raffaela) சாஹிபா. இவர் ஒரு ஆய்வு மையத்தின் இயக்குனர் ஆவார். இவர் கூறுகிறார்: பைஅத்தின்போது அஹ்மதிகளின் ஈமானிய நிலைமையை அந்நியர்களும் உணர்ந்தனர். நான் Phycology – மனோதத்துவம் படித்துள்ளேன். மேலும் மனிதனின் நடை பாவனை மற்றும் நடத்தை மூலமாக அவர் தனது ஈமானிய வாதத்தில் எவ்வளவு நேர்மையாக இருக்கிறார் என்பதைப் புரிய முடியும்.

அஹ்மதிகளைப் பார்த்து அவர்களின் ஈமானிய தரம் மிகவும் உயர்ந்தது என்ற நிச்சய உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டது. கடந்த ஆண்டு 6 இலட்சத்திற்கும் அதிகமான பைஅத்துகள் நிகழ்ந்துள்ளன என்று அவருக்குத் தெரிய வந்தபோது இம்மக்கள் ஜமாஅத்தில் இணைந்ததுடன் இறைவனுக்கு நன்றி என்று கூறினர்.

இத்தாலியைச் சார்ந்த ஒரு பெண் விருந்தினர் ***ரஸீலா ஃபெப்யானி*** சாஹிபா. இவர்கள் கீழத்திசை நாடுகளில் மொழிகளைக் கற்றவர் ஆவார். Orientalis ஆவார். மேலும் வாட்டிகனிலுள்ள ஒரு பத்திரிகையின் நிருபரும் ஆவார். இவர் கூறுகிறார்: மாநாட்டிற்கு வந்து ஜமாஅத்தின் சில பணிகளைப் பற்றி தெரிய வந்தது. உலகிற்கு இப்படிப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அமைதியான இஸ்லாமிய ஜமாஅத்தைப் பற்றித் தெரிவிக்க வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத் முஸ்லிம்களிடையே பேச்சு வார்த்தை மூலமாக பிரச்சனைகளுக்கு தீர்வு காணப் பெரிதும் முயற்சி செய்கிறது. உங்களுடைய திட்டம், நிகழ்ச்சிகள் மற்றும் தொண்டுகள் பற்றி முழு உலகிற்கும் தெரிய வேண்டும்.

பிறகு பிலோரஷ்யன் பல்கலைக் கழகத்தின் துணை இயக்குனர் **ஷெல்கேட் ஷத்ராஸ்கி** கூறுகிறார்: நான் ஒரு மார்க்க வல்லுநர் இல்லை. ஆனாலும் இஸ்லாத்தைப் பற்றிய மேலோட்டமான அறிவுடையவன் என்ற அடிப்படையில் மாநாட்டில் கலந்து கொள்வது எனக்கு மிகவும் விலை மதிப்புள்ள புறக்கணிக்கப்பட முடியாத மிகவும் பயனளிக்கக்கூடிய அனுபவமாக இருந்தது. இந்த மாநாட்டின் மூலமாக இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கமாகும் என்பது தெரிய வந்தது. இந்த வாக்கியம் அதாவது இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கமாகும் என்பது பொதுவாக மக்களிடம் கேட்க முடிகிறது.

ஆனால் ஒவ்வொருவரும் இதன் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. அவர்களுக்கு எங்கோ இஸ்லாம் பற்றிய அறிவில் குறை உள்ளது. சில இடங்களில் ஏராளமான தவறான எண்ணங்கள் உள்ளன. சில வேளை இஸ்லாத்தின் கடினமான உருவம் அவர்கள் முன் இருக்கிறது. இவைகள் மக்களை இந்த விஷயத்தில் நம்பிக்கை கொள்ள வைப்பதில்லை. ஆனால் மாநாட்டின் சூழல் சந்தேகங்களின் அனைத்துச் சுவர்களையும் உடைத்தெறிந்து விடுகிறது. இந்த தரத்தை உடைய நிகழ்ச்சியில் கலந்து கொள்வது எனது முதல் அனுபவமாகும்.

முதன் முறையாக முஸ்லிம்களின் சூழலை மிக அருகிலிருந்து கவனத்தோடு பார்த்துள்ளேன். இந்த மாநாட்டினால் மிகவும் உள்ளங்கவரும் விஷயங்கள் அடங்கி இருந்தன. பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் தத்தமது சமுதாய கலாச்சார ஆடையில் இருந்தனர். மாநாட்டின் ஏற்பாடுகளும் மனிதனை வியப்பில் ஆழ்த்தி விடுகின்றன. 200 பேர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது கஷ்டமாகி விடுகிறது.

ஆனால் 38 ஆயிரம் மக்களுக்கு ஒவ்வொரு ஏற்பாட்டையும் செய்திருக்கின்றனர் என்ற விஷயம் உண்மையிலேயே வியப்பிற்குள்ளாக்குகிறது. நான் அனைத்து தன்னார்வத் தொண்டர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சிறந்த முறையில் மாநாட்டின் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் தொடர்பாக இதையும் கூறி விடுகிறேன். இம்முறையும் கனடாவிலிருந்து ஏறக்குறைய 140 குத்தாம்கள் Wind up பணிகளுக்காக வந்திருந்தனர். அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றினர். இவர்கள் தவிர யூ.கே –வின் குத்தாம்களும் பணியாற்றினர். அவர்களுக்கும் நன்றி. யூ.கே –வின் தப்லீக் துறை இந்த வருடம் செமினார் மற்றும் கேள்வி பதில் அமர்வுகளுக்கான ஏற்பாடு செய்ததுடன் 5 கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

திருக்குர்ஆன் கண்காட்சி மூலம் திருக்குர்ஆனின் சிறப்புமிகு போதனைகளை வெளிச்சமிட்டுக் காட்டுவது அதன் நோக்கமாகும். அதில் பல்வேறு வகையான திருக்குர்ஆன் வைக்கப்பட்டிருந்தன. இதேபோன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொடர்பாக பேச்சுப் போட்டியும் இருந்தது. ஹாலந்தின் அரசியல்வாதி மில்டர் தரப்பிலிருந்து நடத்தப்பட்ட Hate Campaign –க்கு பதில் கொடுக்கும் விதமாக இந்த பேச்சுப் போட்டி நடந்தது. இதில் பல அஹ்மதி அல்லாத மற்றும் முஸ்லிம் அல்லாத ஐரோப்பியர்களும் கலந்து கொண்டனர்.

கிறித்தவ பெண்மணியான **கேத்தரின் மேரி ரோஹான்** (Katherine Mary Rohan) கூறுகிறார்: பெண் என்ற அடிப்படையில்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பெண்கள் தொடர்பாக என்ன கருத்து கொண்டிருந்தார்கள் என்பதை ஆராய்வதில் அதிக ஆர்வம் இருந்தது. அவர்கள் எப்படிப்பட்ட நேரத்தில் வந்தார்கள் என்றால் ஐரோப்பாவில் மோசமான காலமாக இருந்தது. அப்படிப்பட்ட காலத்தில் நாம் நமது பெண்களுடன் கண்ணியத்துடன் நடந்து கொள்வோம் என்று முஹம்மது (ஸல்) அவர்கள் அறிவிப்பு செய்தார்கள்.

மேலும் இதேபோல் ஒருவர் முஹம்மது (ஸல்) அவர்களிடம் வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் அதிகமாக கண்ணியம் வழங்கப்படுவதற்குத் தகுதியானவர் யார் என்று கேட்டபோது அன்னார் உன்னுடைய தாய் என்று கூறினார்கள். அவர் மீண்டும் கேட்டபோது அன்னார் மீண்டும் உனது தாய் என்றார்கள். மூன்றாவது முறையாக கேட்ட போது உனது தாய் என்றார்கள். இந்த விஷயம் என்னை தாக்கத்திற்குள்ளாக்கியது என்றார்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அதப், பாப் மின் அஹகமுன் நாஸ் பிஹுஸ்ஸி சுஹபத்த ஹதீஸ் எண் 5971)

இதேபோல் ஒரு பெண் விருந்தினர் தப்லீக் துறையைச் சேர்ந்த **லெனிட் கோமேலியன்** கூறுகிறார்: இம்முறை முதன் முறையாக மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அல்லாஹ் தொடர்பாக குறைவான அறிவுடையவர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டால் மாநாடு முடியும் போது அந்த விஷயத்தில் அவர் அறிவின் கடலை எடுத்துக் கொண்டு திரும்புவார். அதாவது அல்லாஹ் பற்றிய அறிவை எடுத்துச் செல்வார்.

உலகில் பல்வேறு வழிகளில் மாநாடு பற்றி செய்தி மீடியா மூலமாக பரவியது. அது தவிர அல் இஸ்லாம் இணையதளத்தின் மூலமாகவும் 8 இலட்சத்து 62 ஆயிரம் முறை Visit செய்யப்பட்டுள்ளது. 2 இலட்சத்து 18 ஆயிரம் பேர் வீடியோக்களையும் பார்த்துள்ளனர். Online மற்றும் பத்திரிகைகளில் மாநாடு தொடர்பாக வெளி வந்த செய்திகளின் பிரிண்டு எண்ணிக்கை 53 ஆகும்.

வானொலியில் 20 செய்திகள் ஒலிபரப்பாகியுள்ளன. டி.வி –யில் 4 செய்திகள் ஒளிபரப்பாகியுள்ளன. மொத்தம் கிடைத்திருக்கும் அறிக்கைகளின் அடிப்படையில் எண்ணிக்கை 77 ஆகிறது. இதன் மூலாக 26 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது.

கவரேஜ் வழங்கிய புகழ் பெற்ற டி.வி மற்றும் வானொலி சேனல்கள்: BBC TV, ITV, BBC Arabic Economist, The Economist. பத்திரிகை: The Express, Independent of Humpton Post, Herald, LBC Capital Radio Alton Herald, London Live தவிர BBC –ன் 19 Regional Radio Stations –களில் ஞாயிற்றுக்கிழமை அன்று நமது பிரநிதிக்கு நேரம் வழங்கப்பட்டது.

அதன் மூலம் கணிசமாக மக்கள் கவரேஜ் ஆனார்கள். உலகம் முழுவதிலிருந்தும் பத்திரிகையளார்கள் வந்திருந்தனர். அவர்கள் திரும்பிச் சென்று தங்களது செய்தித்தாள்களிலும் எலக்ட்ரானிக் மீடியாக்களிலும் இது பற்றி செய்திகளும் டாக்குமெண்டரிகளும் ஒளிபரப்புவார்கள்.

ஒரு ஜப்பானிய செய்தி ஏஜென்ஸியின் பெண் பத்திரிகையாளர் கூறுகிறார்: மாநாட்டின் அமைதி நிறைந்த சூழலால் நான் மிகுந்த தாக்கத்திற்குள்ளாகியுள்ளேன். அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சி இருந்தது. ஆனால் உலகளாவிய பைஅத்தின் சந்தர்ப்பத்தில் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டவர்கள் தேம்பி தேம்பி ஏன் அழுகின்றனர்?

ஒவ்வோர் அஹ்மதியும் மகிழ்ச்சியாக இருந்தனர். அப்போது அதாவது உலகளாவிய பைஅத்தின்போது அஹ்மதி முஸ்லிம்கள் இறைவன் புறமிருந்து வழங்கப்பட்ட அருள்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் உலகின் அமைதிக்காக பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள் என்று பின்னர் அவர்களுக்கு கூறப்பட்டது.

ஒரு பெண் பத்திரிகையாளர் பெண்களுக்கான மாநாட்டுத் திடல் பற்றி கூறுகிறார்: கடந்த ஆண்டு எனக்கு மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் பெண்கள் பகுதியில் செல்ல இயலவில்லை. இவ்வாண்டு பெண்கள் பகுதிக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. உங்களுடைய பெண்கள் ஆண்களை விட அதிகம் படித்துள்ளனர். மேலும் உள்ளம் கவரக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லா வகையிலும் சுதந்திரமாக இருந்தனர். மேலும் தமது ஜமாஅத்துடன் மிகவும் கலப்பற்ற பற்றுக் கொண்டவர்களாகத் தென்பட்டனர் என்பதை நான் கூறியே ஆக வேண்டும். இது என்னை மிகுந்த தாக்கத்திற்குள்ளாக்ககூடிய அனுபவமாக இருந்தது.

ஆப்பிரிக்காவில் மாநாட்டின் கவரேஜ் இவ்வாண்டு 15 டி.வி சேனல்கள் யூ.கே ஜல்ஸாவின் நிகழ்சிகளை ஒளிபரப்பியது. அதில் கானா, நைஜீரியா, செராலியோன், கேம்பியா, ருவாண்டா, புர்கினோஃபாஸோ, பெனின், உகாண்டா, மாலி, காங்கோ பிரெஸில் தவிர முதன் முறையாக புரூண்டி தொலைக்காட்சியும் மாநாட்டின் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. ஒவ்வொரு பத்திரிகையாளரும் தத்தமது சேனல்களில் செய்திகளை வழங்கினர். மொத்தமாக இதன் மூலம் 50 மில்லியன் மக்கள் வரை ஆப்பிரிக்காவில் மாநாட்டின் நிகழ்ச்சி காட்டப்பட்டது. இது தொடர்பாக நூற்றுக்கணக்கான தாக்கங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதிலிருந்து மக்கள் பார்த்துள்ளனர் என்பது தெரிகிறது.

எவ்வாறிருப்பினும், இது ஒரு நீண்ட விபரமாகும். மக்களின் கருத்துக்களும், பிரஸ் செய்திகளும் விரிவானதாகும். இது தவிர வேறு சில துறைகளும் மக்களின் அசாதாரணமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. புகைப்பட கண்காட்சி, ரிவியூ ஆஃப் ரிலீஜியன் கண்காட்சி தவிர ஆர்க்கீவ் மற்றும் அல் ஹகம் கண்காட்சி போன்றவைகள் மூலமாக மக்களுக்கு ஜமாஅத்தின் வரலாறு பற்றி தெரிய வந்தது.

மாநாட்டின் ஏற்பாடுகளைச் செய்தவர்களும், கண்காட்சிகள் போன்றவற்றில் பணியாற்றியவர்களும் தன்னார்வத் தொண்டர்களே ஆவர். மேலும் மக்களின் தாக்கங்களிலிருந்து தெரிவது போல் இந்த அனைத்து தன்னார்வத் தொண்டர்களும் சிறுவர்களும், ஆண்களும் பெண்களும் ஓர் அமைதியான தப்லீக் செய்து கொண்டிருந்தனர்.

இம்முறை ஆண்கள் மற்றும் பெண்கள் பகுதியில் பணி செய்த ஆண் பெண் பணியாளர்களிடத்தில் அசாதாரணமான நல்லொழுக்கத்தைக் காண முடிந்தது எனவும், தொண்டாற்றக் கூடிய உணர்வு அசாதாரணமாக இருந்தது என்றும் கலந்து கொண்டவர்கள் பொதுவாக வெளிப்படுத்துகின்றனர்.

இதன் காரணமாக கலந்து கொண்டவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திய பிறகு அந்த தொண்டாற்றக்கூடியவர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். மேலும் அல்லாஹ் அவர்களுக்கு எதிர்காலத்திலும் தொண்டாற்றும் வாய்ப்பை வழங்குவதற்காக துஆவும் செய்ய வேண்டும். நானும் அனைத்து ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக. எதிர்காலத்தில் முன்பை விட அதிகமாக தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் எப்போதும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் உதவியாளர்களாக இருப்பார்களாக. அனைத்து பணியாளர்களும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். ஆண் பெண் பணியாளர்கள் அதிகமாக அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்

அல்லாஹ் அவர்களுக்கு தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக. அல்லாஹ்வின் உதவி இல்லாமல் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைப்பது சாத்தியமில்லாதது. அல்லாஹ் அனைவருக்கும் பணிவில் முன்னேறும் நல்வாய்ப்பினை வழங்குவானாக. மேலும் இந்த தொண்டின் காரணமாக கிடைத்த பாராட்டுதலால் எவ்வித ஆணவமும் அவர்களிடத்தில் ஏற்படாதிருக்கட்டுமாக.

# சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

**23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்**

(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

**புதிதாக பைஅத் செய்தவர்களின் தர்பிய்யத் துறை:**

ஹுஸூர் அவர்கள் கேட்டதற்கிணங்க புதிதாக பைஅத் செய்தவர்களின் தர்பிய்யத் செயலர் அவர்கள் இந்த வருடம் 126 பைஅத்துகள் ஜெர்மனியில் நடைபெற்றுள்ளன என்று தெரிவித்தார்கள். கடந்த வருடம் நடைபெற்ற பைஅத்துகளில் ஜமாஅத்தில் இணைந்தவர்களை ஜமாஅத் அமைப்புடன் இணைத்து வைப்பதற்காக நீங்கள் என்ன பணிகளைச் செய்தீர்கள் என்று ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள். அவ்வாறு புதிதாக பைஅத் செய்த எத்தனை நபர்களுடன் தொடர்ந்து உங்களுடைய தொடர்பு இருந்து வருகின்றது என்றும் ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு செயலர் அவர்கள், புதிதாக பைஅத் செய்த பெண்களுடனுள்ள தொடர்பு பற்றிய எந்த அறிக்கையும் எங்களிடத்தில் இல்லை. ஆனால் ஆண்களைப் பொருத்தவரை கடந்த வருடம் பைஅத் செய்தவர்களில் 50 அரேபியர்களும் அடங்குவர். அவர்களுடன் தொடர்ந்து எங்களுடைய தொடர்பு இருந்து வருகிறது. இங்கு நாங்கள் அரபி டெஸ்க்கும் உருவாக்கியிருக்கின்றோம். ஹஃபீஸுல்லாஹ் பர்வானா சாஹிப் அவர்கள் இதற்கு இன்சார்ஜாக இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொரு மாதமும் இதற்கான அறிக்கையை எனக்கு தந்து கொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், உங்களுக்குப் புதிதாக பைஅத் செய்த பெண்கள் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். அவர்களுடனும் உங்களுடைய தொடர்பு இருக்க வேண்டும். நீங்கள் லஜ்னாவிடமிருந்து இதற்கான அறிக்கையைப் பெறுங்கள். புதிதாக பைஅத் செய்த எத்தனை பெண்களுடன் லஜ்னா இமாயில்லாஹ் தொடர்பு வைத்திருக்கின்றது? எத்தனை பேருடன் தொடர்பு இல்லாமல் இருக்கின்றது ஆகியவற்றைக் கேட்டு தெரிந்திருக்க வேண்டும். உங்களிடம் இதுபற்றி அறிக்கையே இல்லையெனில் நீங்கள் எவ்வாறு அவர்களை ஜமாஅத் அமைப்புடன் இணைத்து வைக்க முடியும்.

புதிதாக பைஅத் செய்த ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் தர்பிய்யத் வழங்கும் பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் இந்த புதிதாக பைஅத் செய்தவர்களின் தர்பிய்யத்திற்காக ஏதாவது திட்டத்தை வகுத்திருந்தால் இந்த திட்டத்தை லஜ்னாவிற்கும் தெரிவிக்க வேண்டும். அந்த திட்டத்தை எழுதி அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

அதன் மூலமாக லஜ்னாவும் அந்த திட்டடத்திற்கேற்ப செயல்பட வேண்டும். இந்த திட்டத்திற்கேற்ப செயல்படுவது லஜ்னா தரப்பிலிருந்து இருக்குமானால் இதற்கான திட்டத்தை நீங்கள் தான் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். இந்த திட்டத்தைப் பற்றி நீங்கள் தான் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எந்தெந்த ஜமாஅத்துகளில் புதிதாக பைஅத் செய்தவர்கள் இருக்கின்றார்களோ அந்த ஜமாஅத்துகளுக்கு நீங்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும். புதிதாக பைஅத் செய்த அனைவரிடமும் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் தொடர்பு இருக்கின்றதா ? என்று ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு செயலர் அவர்கள், சில ஜமாஅத்துகளுக்கு நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கின்றேன் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் அதிகமான ஜமாஅத்துகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும். புதிதாக பைஅத் செய்தவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து அவர்களைப் பற்றிய அறிமுத்தை நீங்கள் பெற வேண்டும். நீங்களும் உங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நீங்கள் தான் புதிதாக பைஅத் செய்தவர்களுடைய தர்பிய்யத் செயலர் என்பது புதிதாக பைஅத் செய்தவர்களின் அறிவில் இருக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் பிரச்சனை ஏற்பட்டால் அவர்கள் உங்களோடு தொடர்பு கொள்ள முடியும். இவ்வாறு உள்ளூர் அளவிலும் பல்வேறு ஜமாஅத்துகளிலுள்ள புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு புதிதாக பைஅத் செய்தவர்களின் தர்பிய்யத் செயலரைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும்.

ஆனால் ஜமாஅத்துகள் புதிதாக பைஅத் செய்தவர்களுடைய தர்பிய்யத் செயலர் மீது மட்டும் நம்பிக்கை வைக்கக்கூடாது. ஜமாஅத்திலுள்ள மற்றவர்களும் அவர்களோடு தொடர்பு வைத்திருக்க வேண்டும். இதன் மூலமாக நாம் அவர்களுக்குச் சிறந்த தர்பிய்யத்தை வழங்க முடியும் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

இதற்குப் பிறகு புதிதாக பைஅத் செய்தவர்களுடைய தர்பிய்யத் செயலர் அவர்கள் ஹுஸூர் அவர்களிடம், ஜெர்மனியில் சிலர் அஹ்மதி பெண்களுடன் திருமணம் செய்கின்றனர். அவ்வாறு அவர்களைத் திருமணம் செய்வதற்காகவே அவர்கள் ஆரம்பத்தில் பைஅத் செய்கின்றனர். திருமணம் நடைபெறும் வரை அவர்கள் தொடர்பில் இருந்து வருகின்றனர். திருமணம் நடந்த பிறகு அவர்கள் விலகிச் சென்று விடுகின்றனர். அத்தகைய மக்களுக்குத் திருமணம் செய்வதற்குள்ள அனுமதி வழங்கலாமா? என்று கேட்டார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

சில குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டே திருமணத்திற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் இந்த அனுமதியை சுயமே நான் தான் வழங்குகின்றேன். எனவே உங்களது பணி அத்தகைய மக்களுக்கு தர்பிய்யத் கொடுப்பது மட்டுமே ஆகும். எனவே தர்பிய்யத் பணிகளை நீங்கள் தொடர்ந்து செய்து வாருங்கள்.

அவர்களுக்கு சூரா ஃபாத்திஹா மற்றும் இஸ்லாம் தொடர்பான அடிப்படை விஷயங்களைக் கற்றுக் கொடுங்கள். எந்த பெண்ணுக்கு திருமணம் நடைபெறுகின்றதோ அந்த பெண்ணுக்கும் லஜ்னா மூலமாக இதன் பக்கம் கவனமூட்டுங்கள்.

இப்போது இந்த பெண்ணுக்கு திருமணம் நடந்திருக்கின்றது. எனவே இவருக்கு இஸ்லாம் தொடர்பாகக் கற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கின்றது. ஜமாஅத்தின் ஓர் அங்கமாக மாற்ற வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கின்றது என்பதை லஜ்னாவிற்கு நீங்கள் எடுத்துக் கூறுங்கள்.

*(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)*

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 13 September 2018 Issue No. 37

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஆகவே, பகுத்தறிவு எதனை ஏற்றுக் கொள்வதற்குத் தகுதி படைத்ததாகக் கருதுகிறது என்பதை இப்போது சிந்தியுங்கள்.

ஹாபிஸ் ஷீராஸி என்பவரின் கீழ்வரும் கூற்று உண்மையாகும்:

ஷேக்கே! என்னோடு நீ வருத்தப்படாதிருப்பீராக! நான் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் சீடனும் ஊழியனுமாவேன். நீர் வாக்குறுதி மட்டும் செய்துள்ளீர். ஆனால் என் அன்பிற்குரிய குருவாகிய திருநபி (ஸல்) அவர்களோ அந்த எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளார்கள்.

பைபிளின் புதிய ஏற்பாட்டில் சகித்துக் கொள்பவர்கள், ஏழை எளியவர்கள் ஆகியோர் போற்றப்பட்டிருக்கிறார்கள். மேலும் துன்புறுத்தப்படும் நிலையில் எதிர்த்துப் போர் செய்யாதவர்களும் போற்றப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கு மாறாகத் திருக்குர்ஆன் நீங்கள் எந்நேரமும் அடக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; தீமையை எதிர்க்கக் கூடாது என்று மட்டும் கூறாமல் சகிப்புத்தன்மை, அடக்கம், எளிமை, எதிர்க்காமலிருப்பது ஆகியவை நல்லதென்றாலும் இடத்தையும் சந்தர்ப்பத்தையும் கவனிக்காமல் பயன்படுத்தினால் அது தீமையானதாகும். ஆகவே, நீங்கள் இடத்தையும் சந்தர்ப்பத்தையும் கவனித்து ஒவ்வொரு நன்மையான காரியத்தையும் செய்யுங்கள் என்றும் அது கூறுகிறது.

ஏனெனில் சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு மாறாகச் செய்யப்படும் நன்மை தீமையாகும். எவ்வாறு மழை மிகவும் நல்லதாகவும் அவசியமானதாகவும் இருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்கு மாறாகப் பெய்தால் அம்மழையே பெரும் அழிவிற்குக் காரணமாகி விடுகிறது என்பதை நீங்கள் பார்த்து வருகிறீர்கள். மேலும் ஒரே விதமான குளிர்ச்சியான உணவு அல்லது சூடான உணவைத் தொடர்ச்சியாக உண்டு வந்தாலும் உங்களது ஆரோக்கியமானது நிலைத்திருக்க முடியாது என்பதனையும் நீங்கள் கண்டு வருகிறீர்கள்.

மாறாக, சூழ்நிலைக்கேற்றவாறு நீங்கள் அருந்தும் அல்லது உண்ணும் பொருள்களில் அவ்வப்போது மாற்றம் இருந்து வந்தால் தான் உங்களது ஆரோக்கியம் நிலைத்திருக்க முடியும். ஆகவே கடுமை, மென்மை, மன்னித்தல், பழிவாங்குதல், துஆச் செய்தல் மற்றும் ஒரு சிலருக்கு விரோதமாகச் செய்யப்படும் துஆக்கள் மேலும் பிற நன்நடத்தைகளிலெல்லாம் உங்களுக்குச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மாறுதல் செய்வது அவசியமாகும்.

நீங்கள் மிகச் சிறந்த சாந்தகுணம் உடையவர்களாகவும், நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் ஆகுங்கள். ஆயினும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் மாறாக அவ்வாறு நீங்கள் இருத்தலாகாது. சுய விருப்பங்கள் எனும் எந்தவொரு விஷமும் கலக்கப்படாத உண்மையான நல்லொழுக்கமானது மேலிருந்து பரிசுத்த ஆவியின் மூலமாகவே வருகின்றது என்பதனையும் நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள்.

மேலிருந்து அந்த நல்லொழுக்கங்கள் உங்களுக்கு அருளப்படாத வரை அவற்றை நீங்கள் உங்கள் சுய முயற்சியினால் மட்டும் பெற்றுக் கொள்ள முடியாது. மேலும் பரிசுத்த ஆவியின் மூலமாக வானத்தின் அருட்கொடையிலிருந்து நல்லொழுக்கத்தில் பங்கு பெறாத ஒவ்வொருவரும் தன் நல்லொழுக்கத்தைப் பற்றிய வாதத்தில் பொய்யனாகவே இருக்கிறார். ஏனெனில் அவனது நல்லொழுக்கம் என்னும் தண்ணீரின் அடியில் அதிகமான சேறும், சாணமும் உள்ளன. அவை ஆன்மாவின் ஆவேசத்தின் போதே வெளியாகின்றன.

ஆகவே, அச்சேற்றிலிருந்தும், சாணத்திலிருந்தும் நீங்கள் இரட்சிப்புப் பெறுவதற்காகவும், பரிசுத்த ஆவி உங்களிடையே உண்மையான பரிசுத்தத்தையும், செழுமையையும் உருவாக்குவதற்காகவும், நீங்கள் எல்லா நேரமும் இறைவனிடம் அவனது சக்தியைத் தேடிக் கொண்டே இருப்பீர்களாக.

வேறெதுவும் இணை இல்லாத உண்மையானதும், தூய்மையானதுமான நல்லொழுக்கங்களே உண்மையானவர்களின் அற்புதங்களாக இருக்கின்றன என்பதனையும் நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் இறைவனுக்காகத் தங்களை அர்ப்பணித்த நிலையில் அவனோடு ஐக்கியமாகாதவர்கள் அவனிடமிருந்து சக்தியைப் பெறுவதில்லை. அவர்களால் தூய்மையான நல்லொழுக்கங்களையும் பெற முடியாது. எனவே நீங்கள் இறைவனோடு உண்மையான தொடர்பை உருவாக்குங்கள்.

ஏளனமாக நகைத்தல், பொறாமை, பழித்தல், பேராசை, பொய், விபச்சாரம், தீய பார்வை, தீய எண்ணம், உலக இச்சை, பெருமை, கர்வம், சுயநலம், விஷமத்தனம், குதர்க்க வாதம் ஆகியவற்றை முற்றிலும் விட்டு விடுங்கள். இதன் பின்னரே நீங்கள் எல்லாவற்றையும் வானத்திலிருந்து பெறுவீர்கள்.

எதுவரை உங்களை மேலே இழுத்துச் செல்லக்கூடிய அவ்வுயர்ந்த சக்தியுள்ளவன் எப்போதும் உங்களோடு இருந்து வர மாட்டானோ, வாழ்வு அளிக்கக்கூடிய பரிசுத்த ஆவி உங்களுக்குள் நுழையாதோ அதுவரை நீங்கள் மிகவும் பலவீனத்திலும், இருளிலும் ஆழ்ந்தவர்களாகவே காண்படுவீர்கள்; மேலும் உயிர் இல்லாத பிணமாகவும் இருந்து வருவீர்கள்.

இந்நிலையில் நீங்கள் எந்தவொரு துன்பத்தையும் எதிர்த்துச் சமாளிக்கவும் முடியாது. வெற்றியிலும், செல்வ நிலையிலும் கர்வம் அகங்காரத்திலிருந்து தப்பவும் முடியாது. மேலும் ஒவ்வொரு விதத்திலும் ஷெய்த்தானாலும் உலக இச்சையாலும் தோல்வி அடைந்தவர்களாகவே நீங்கள் காணப்படுவீர்கள்.

ஆகவே, இறைவனது சிறப்பான கரத்திலிருந்து இறங்கக்கூடிய பரிசுத்த ஆவியானது உங்களை நன்மை, நேர்மை ஆகியவற்றின் பக்கம் திருப்புவதே உங்களுக்குரிய உண்மையான ஒரே பரிகாரமாகும்.

ஆகவே, நீங்கள் ஷெய்த்தானின் பாதையிலிருந்து அடைக்கலம் பெறுவதற்காக வானத்தோடு சம்பந்தப்பட்டவர்களாக ஆகுங்கள்; பூமியோடு சம்பந்தப்பட்டவர்களாக ஆகாதீர்கள். மேலும் நீங்கள் ஒளியின் வாரிசாக ஆகுங்கள். இருள் மீது மோகம் கொண்டவர்களாக ஆகாதீர்கள்.

ஏனெனில் எப்போதும் ஷெய்த்தானின் குறிக்கோளானது இரவே அல்லாமல் பகல் அன்று. ஏனெனில் அவன் இருளில் கால் எடுத்து வைக்கும் பழக்கத்தையுடைய பழைய திருடனாய் இருக்கின்றான்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 43–45)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad